
# களத்தில்



விடுதலைப் போராட்டம் எமது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கண்ணீரும் குருதியும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, நாம் சொரிந்த துயரத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம்.

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*மேதகு வே. பிரபாகரன் அவர்கள்*

(14.01.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (177) அன்பளிப்பு : 60 p



என் வாழ்நாளில் நான் ஒரு போராளியாக, என் மக்களுக்காக, அவர்களின் சுபீட்சத்துக்காகப் போராடும் வாய்ப்புக் கிடைத்ததை ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன் எனது ஆயுட்காலம் வரை இப்பணியைச் செய்ய வேண்டும் என்பதே என் விருப்பம். நாம் எமது மக்களுக்கு அமைதியையும் சுபீட்சத்தையும் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் போராடிக்கொண்டிருக்கின்றோம். எமது எதிரியோ எமது தேவையை, கோரிக்கையை ஏற்பதாக இல்லை. தான் கொடுக்கும் சலுகைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கிறானே ஒழிய, எமது உரிமையைக் கொடுக்க தயாராக இல்லை. நாம் பேராசை பிடித்தவர்களோ, உலகின் நடைமுறை தெரியாதவர்களோ அல்ல. நாம் கேட்கின்ற அடிப்படை உரிமை, எமது மண்ணிலே எமது மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமைதான். அதைவிடுத்து மாகாணசபையாலோ அல்லது அதைவிடக் கூடிய அதிகாரங்களைக் கொண்ட சபையாலோ எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. எமது மக்களின் பாதுகாப்பு பூரணமாக உறுதிப்படுத்தப்படும் ஒரு வடிவத்தைத்தான் நாம் தேடிக் கொண்டிருக்கிறோம்.

*கேணல் கிட்டு அவர்கள் தன் மனைவிக்கு எழுதிய கடிதத்திலிருந்து...*

# மத்தியஸ்துவத்திற்கு சந்திரிகா முட்டுக்கட்டை!

## இராணுவத் தீர்வுக்கு துரித முயற்சி





அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

போராற்ற முறையில் முரண்பாட்டிற்கு தீர்வுகாணும் முயற்சிகளுக்கு சிறீலங்கா அரசு முட்டுக்கட்டையிட்டு வருகின்றது.

தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் முன்வைத்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவம் தொடர்பான கருத்துக்களை வரவேற்று உலகின் பல்வேறு நாடுகளும் அமைப்புக்களும் அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகையில் சர்வதேச சமூகத்தின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவ முயற்சிகளுக்கு எதிரான முயற்சியில் சிறீலங்கா ஈடுபட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா கடந்த வருடம் ஐக்கியநாட்டு பொதுச் சபைக் கூட்டத் தொடரில் தமிழ் – சிங்கள இன முரண்பாட்டைத் தீர்க்க ஐக்கிய நாட்டுச் சபை முயற்சிகளை மேகொள்ளவேண்டுமென கோரிக்கை விடுத்ததையடுத்து தென்னாபிரிக்கா மீது பல்வேறு பொய்ப் பரப்புரைகளை முடுக்கிவிட்டிருந்த சந்திரிகா அரசு பல்வேறு சர்வதேச நிறுவனங்களில் புலிகள் பற்றிய பொய்ப் பரப்புரைகளை முடுக்கிவிட்டுள்ளது.

அண்மையில் இந்தியா சென்று அங்கு தன் போர் நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்ட முயன்ற சந்திரிகா தன் விஜயத்தின் பின்னர் கொழும்பில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு எதிரான தனது கருத்துக்களை திட்டமிட்ட முறையில் வெளியிட்டு வருகின்றார் மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவத்தை இந்தியா விரும்பவில்லை என தன்னிடம் கூறியதாக சந்திரிகா சிறீலங்கா அரசு ஊடகங்கள் ஊடாக செய்தி வெளியிட்டு வருகின்றார்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**




# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

### லெப். கருவரசன்
**ஐயம்பிள்ளை மகேந்திரகுமார்**
மட்டக்களப்பு மாவட்டம்

(26.12.1998 அதிகாலை 1 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி கறுத்தப் பாலம் என்னுமிடத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின் போது விழுப்புண் அடைந்திருந்து 02.01.1999 வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.)

### வீரவேங்கை தவசீலி
**பரமானந்தம் சுகந்தி**
கோயில்புளியங்குளம் நெடுங்கேணி
த/மு முதலாம் வட்டாரம் முள்ளியவளை

(02.01.1999 அம்பகாமம் பகுதியில் தவறுத லாக ஏற்பட்ட வெடிவிபத்தின்போது வீரச் சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்)

### வீரவேங்கை ஈழச்செல்வன்
**சித்திரசேகரம் ராம்குலன்**
திருமலை மாவட்டம்
த/மு புதுக்குடியிருப்பு 6ம் வட்டாரம்
முளக்காவில்

(04.01.1999 காலை மன்னார் கடற்பரப்பில் சிங்கள கடற்படையினருடன் ஏற்பட்ட மோத லில் போது வீரச் சாவடைந்துள்ளார்)

### லெப். கதிர்நேசன்
**சண்முகலிங்கம் ஜெகதீபன்**
யாழ் மாவட்டம்
த/மு உடையார் கட்டை

06.01.1999 முல்லை மாவட்டத்தில் தவறுத லாக ஏற்பட்ட வெடிவிபத்தின்போது வீரச் சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்.)

### வீரவேங்கை தூயவள்
**யோகராசா யோகராணி**
திருமலை மாவட்டம்

07.01.199 மாங்குளத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவைத் தழு விக்கொண்டுள்ளார்.)

### வீரவேங்கை பரதன்
**சோமசுந்தரம் அருளானந்தராசா**
அம்பாறைமாவட்டம்

(07.01.199 ஒட்டிசுட்டான் பகுதியில் இராணு வத்துடன் ஏற்பட்ட மோதலின் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்.)

### வீரவேங்கை அற்புதராணி
**லோறன்ஸ் தனிகை**
யாழ் மாவட்டம்

(09-01-99 மூன்று முறிப்புப் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்டமோதலின் வீரச் சாவைத் தழுவிக்கொண்டுள்ளார்.)

தமிழீழ ஆவணக்காப்பகம்

### வீரவேங்கை மரியாம்பிள்ளை
**சிவனாதபிள்ளை கடோர்**

(09-01-99 அன்று சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.)

### வீரவேங்கை தமிழ்மொழியன்
**வைத்திலிங்கம் கவிதைவாசன்**
யாழ் மாவட்டம்

(08-01-99 அன்று தற்செயலாக ஏற்பட்ட வெடி விபத்தில் போது வீரச்சாவைத் தழு விக் கொண்டுள்ளார்.)

10.01.1999 அன்று அம்பகாமம் பகுதியில் இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கிய தால் மூன்று போராளிகள் வீரச்சாவடைந் துள்ளார்கள்.

### வீரவேங்கை திருவேல்
**அழகுதுரை சங்கரப்பிள்ளை**
மட்டக்களப்பு மாவட்டம்

### வீரவேங்கை காவற்குமரன்
**வைரமுத்து மன்மதராஜா**
மட்டக்களப்பு மாவட்டம்

### வீரவேங்கை கார்த்திகன்
**சபாரட்ணம் நவரெத்தினராஜா**
மட்டக்களப்பு மாவட்டம்

07.01.99 சாவகச்சேரி நுணாவில் பகுதியில் ஏற்பட்ட நேரடிமோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

### கப்டன் கதிரொளி
**பிலிப்பையா றொபின்சன்**
யாழ். மாவட்டம்
த/மு ஐந்தாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு

### லெப்.சுதாகர்
**விஜயானந்தன் விஜயகதன்**
யாழ். மாவட்டம்

### வீரவேங்கை கோகுலபாதம்
**புஸ்பராஜா ராஜ்**
மட்டக்களப்பு மாவட்டம்

(11.01.99 அன்று இராணுவத்தினருடன் மாங்குளத்தில் ஏற்பட்ட மோதலின்போது வீரச்சாவடைந்தார்)

---

06ம் பக்கத் தொடர்ச்சி

### ராமின் 'சந்திரிகா புறொஜெக்ட்'

நாம் பார்க்க அல்லது புலி இயக்க உறுப் பினர்களிலும் பார்க்க பலமானவர் என வும் முரண்பாடாககூறிய சந்திரிகா தனக்கு எதிராக பிரபாகரன் பொய் கூறி வருகின் றார் என கவலை தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் மக்களின் தலைவர் என கூறுவது போல் கூறி ஆனால் அவர் மக் களை பொய் சொல்லி ஏமாற்றி தனக்கு எதிராக பாவிப்பதாக இந்திய மத்திய வர்க்க ஆங்கிலம் வாசிக்கும் மக்களிடம் சந்திரிகா கூற முயன்றுள்ளார். இதே போன்று புலிகளுடனான சிங்கள அரசின் பேச்சு வார்த்தை 1995ல் முறிவடைந்ததற் கான காரணத்தை திரித்துக் கூறவும் அவர் முயன்றார். தமிழீழத் தேசியத் தலைவர் முன்வைத்த மாவீரர்நாள் 98 உரையி லிருந்து பதிலளிக்க முடியாது பலவீன மான நிபந்தனைகளையும் கோட்பாடுக ளையும் சந்திரிகா இச் செவ்வியில் தெரி வித்திருக்கிறார். மேலும் புலிகளின் பலம் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்க்குழுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியி னும் பார்க்க தனது நிர்வாகத்திடம் முயற் சிக்க விசுவாசமாக இருப்பதாகவும் கூறி யுள்ளார்.

புலிகளை ANC க்கு நிகரான தேசிய விடுதலை இயக்கமாக ஆபிரிக்க சமூகம் கருதுவது பிழை என ராமிடம் ஒப்பாரி வைத்துள்ள சந்திரிகா அனைத்து பிழைக ளுக்கும் காரணம் ஐக்கிய தேசியக் கட்சி எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார் [illegible]. அவரது முழுச் செவ்வியும் 'புத்திஜீவி' ராமினால் வழிநடாத்தப்பட்ட போதும் அப் பட்டமான பரப்புரை மணம் வீசும் [illegible] டையாகவே இது காணப்பட்டது.

தமிழ் சிங்கள இன முரண்பாட்டிற் கான அடிப்படைக்காரணத்தை ஐக்கிய தேசியக் கட்சி மீது போட்டு விட்டு தன் னையும் தன் கட்சியையும், தான் தலைமை தாங்கும் சிங்கள பௌத்த அமைப்பையும் ஜனாதிபதி சந்திரிகா பாதுகாக்க முற்படு கின்றார். இது அவரது குறுகிய அதிகார அரசியல் நோக்கத்தின் பிரதிபலிப்பாகும்.

புலிகள் மீது அபாண்டமாக பழியினை இந்திய மத்திய வர்க்க ஆங்கிலம் வாசிக்கும் மக்களுக்கு கூறுவதற்காக புலிகள் ஆட் வைக் கட்டுப்படுத்தி [illegible] சிங்கள ஜனாதிபதி கூறுவது அதனை எது வித ஆதாரக் கேள்விகளும் இல்லாமல் ராம் நிரூபிக்க முயன்றதும் இச் செவ்வியின் கொடுமையான வேடிக்கையாகும்.

புலிகளின் பலம் அதிகரித்து யாழ் வழிச்சமரை முன்னெடுக்கும் ஆற்றலை பெற்று விட்டனர் என்ற அடிப்படை இராணுவ கணக்கை கொழும்பின் சிங் கள ஆங்கில நாளேடுகள் கூட பல தடவை வெளியிட்ட போது புலிகள் ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தி லும் பார்க்க பலவீனப்படுத்தப்பட்டனர் என ஜனாதிபதி சந்திரிகா தன் இராணுவ கணக்கை வெளிப்படுத்தியமை விசித்திர மாக இருக்கிறது.

இச் செவ்வியானது புலி எதிர்ப்புக் கருத்துக்களை மத்தியவர்க்க இந்திய மக்க ளிடம் விதைக்கும் நோக்கைக் கொண்டு [illegible] வரலாற்றுப் போக்கை கவனித்து நடப்புக்களை அவதானிக்கும் மக்கள் இச் சாக்கடை முயற்சிகளை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.


***

07ம் பக்கத் தொடர்ச்சி

**போர் அவர்களை [illegible] ஆக்குகின்றது**

'விமானம் ஆகாயத்திலே சமர் புரிவதற்காக அமைக்கப்பட்டவை ஆனால், விமான ஆயுதங்களைக் கொண்டிராது தமிழ்ப்புலிகளுடன் போரிடுவதற்காக நாம் அவற்றை வாங்கியுள்ளோம். இது ஒரு நுளம்பை பெரியதொரு சுத்திய லால் அடித்துக் கொல்வதற்கு ஒப் பானது. எமக்குத் தேவையானவை, தரையில் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய விமானங்களும், போர் உலங்கு வானூர்திகளுமா கும், என்கிறார் விமானப்படை யின் முன்னாள் உதவி மாஷ லான ஹரி குணதிலக.

***



# ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் J.O.C. சந்திரிகாவின் J.O.B..



## பணி ஒன்றே.. பலனும் ஒன்றே!!

இந்த வருடத்தை சிறீலங்கா அரசு, தனது படையினருக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக, பொதுமன்னிப்பு என்ற வலைவிரிப்புடன் ஆரம்பித்துள்ளது. படையில் இருந்து தலைமறைவாகி இருக்கும் பதினையாயிரம் படையினருக்கு, ஐந்துநாள் பொதுமன்னிப்பு அறிவித்து, அவர்களை, மீண்டும் படையில் வந்து இணையுமாறு வேண்டுகோள் விடுத்து, புதிய ஆண்டை சந்திரிகா அரசு எதிர் கொண்டுள்ளது. கடந்த வருட ஆரம்பத்தில், தலை மறைவான படையினருக்காக அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்பு அறிவித்தலின் போதும், பதினையாயிரம் படையினரே தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் பத்துக்கும் மேற்பட்ட பொது மன்னிப்புக்களை, சந்திரிகா அரசு படையினருக்காக அறிவித்தது. ஒவ்வொரு, பொது மன்னிப்புக்காலம் முடிவடைகின்ற போதும், இணைந்து கொண்டோர் தொகை என, சில கணக்குகளையும் சிங்கள அரசு முன்வைக்கத் தவறுவதில்லை. இதில் விசேடம் என்னவென்றால்,



லெப்டினன்ட் ஜெனரல் ரொகான் தலுவத்தை

இந்த ஆண்டு, முதல் வாரத்தில் அறிவிக்கப்பட்ட, இப்பொது மன்னிப்பு அறிவித்தலின் போதும், பதினையாயிரம் படையினர் தலைமறைவாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த வருடம் அறிவிக்கப்பட்டபத்துக்கு மேற்பட்ட பொது மன்னிப்பு அறிவித்தலின்போது, மீண்டும்படையில் இணைய எவருமே முன்வரவில்லை. அல்லது, சிறீலங்கா சொல்லும் கணக்குகளின் படி, ஒரு தொகையினர் இணைய மறுவளத்தே அதற்கு சற்றேறக் குறைய ஒரு தொகையினர் தலைமறைவாகின்றனர் என்றே கொள்ளப்படவேண்டியுள்ளது.

புதிய இராணுவத்தளபதி, பதவி ஏற்ற கையுடன், விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை மேற் கொள்ளவும், கைப்பற்றிய பகுதிகளைத் தக்க வைத்துக்கொள்ளவும் இருபதினாயிரம் படையினர் அவசரமாகத் தேவை என்பதை வலியுறுத்தியுள்ளார்.

சிறீலங்காவின் இராணுவத் திட்டங்கள் ஒவ்வொன்றும், விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு தாக்குதல்களினாலும் ஆட்டம் கண்டு, மண் கவ்வும் நிலையில், சிறீலங்கா அரசு, ஒவ்வொரு மாற்றங்களை மேற்கொண்டு, புதிய இராணுவ நகர்வுகளை ஏற்படுத்திப் பார்ப்பது கடந்த காலங்களிலும், இக்காலங்களிலும் நடக்கின்ற காரியமாகிவிட்டது. யுத்தத்தை வெல்ல முடியாமல் இருப்பதற்குரிய உண்மைக் காரணங்களைக் கண்டறிந்தால், சிறீலங்கா அரசு, சமாதானப் பேச்சு வார்த்தைக்கும், நியாயமான தீர்வுக்கும் தானாகவே வந்துவிடும். ஆனால், சிறீலங்கா அரசு, பௌத்தசிங்களப் பேரினவாதக் கண்ணாடி யூடாகவே தமிழ் மக்களின் பிரச்சினையைப் பார்க்கக் கற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் ஒரேதீர்வு, தமிழ்மக்களை, பலவீனப் படுத்துவதென்பதே. தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கி அடிபணியவைப்பதற்கு, இராணுவ நடவடிக்கை அதிமுக்கியமானது. அதைத்தான் புதிய புதிய பெயர்களில், ஒவ்வொரு சிங்கள அரசுகளும் மேற்கொள்கின்றன. அடி வாங்குகின்றன. மீண்டும் புழுதியைத் துடைத்துக் கொண்டெழுந்து, இரத்தம்வடியும் மோவாயைத் துடைத்தபடி, மல்லுக்கு நிற்கின்றன.

**யுத்தத்தை வெல்ல முடியாமல் இருப்பதற்குரிய உண்மைக் காரணங்களைக் கண்டறிந்தால், சிறீலங்கா அரசு, சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், நியாயமான தீர்வுக்கும் தானாகவே வந்துவிடும். ஆனால், சிறீலங்காஅரசு, பௌத்த சிங்களப் பேரினவாதக் கண்ணாடியூடாகவே தமிழ்மக்களின் பிரச்சினையைப் பார்க்கக் கற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் ஒரே தீர்வு, தமிழ்மக்களை, பலவீனப்படுத்துவது என்பதே.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகள் நடத்திய ஓயாத அலைகள் இரண்டினது, நேரடிவிளைவு ஒரு மகத்தான இராணுவச் சாதனை என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். அதேவேளை, மறைந்து உள்ளிருந்து உறுத்தும் நோயாய், கிளிநொச்சியின் தோல்வி பௌத்த சிங்களப் பேரினவாதத்தை எவ்வளவு பாடாய்ப் படுத்துகின்றது என்பது மெல்ல மெல்லவே வெளிப்பட ஆரம்பித்திருக்கின்றது.

இப்பொழுது யாழ்ப்பாணத்திற்கான தரைப்பாதையமைக்கும் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை, ரத்வத்தையின் தலையில் கட்டிவிடப்பட்டுள்ளது. ஜெயசிக்குறுவின் ஒவ்வொரு வெற்றிகளின்போதும், அந்த வெற்றியில் களிகொண்டு, வீரமுழக்கமிட்ட சந்திரிகா, ஜெயசிக்குறுவின் முதுகெலும்பு முறிக்கப்பட்ட நிலையில், பரிதாபமாய் அது பரிதவித்துக் கிடக்கையில், அத்தோல்வியை, ரத்வத்தையின் பக்கம் நகர்த்திவிட்டு, கறைபடாதவராய் காட்சி தர முயற்சிக்கின்றார். ஜெயசிக்குறுய் என்ற இராணுவ நடவடிக்கை, முடிவடைந்ததாக சந்திரிகா திடீரென அறிவித்தார். ரத்வத்தைக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெருகும் ஆதரவுக்கும் ஆப்பு வைத்தார். தற்போது, ரத்வத்தையின் பொறுப்பிலிருந்து பிடுங்கி எடுப்பது போல், இராணுவ நடவடிக்கைகளாவற்றையும் திட்டமிட்டு, நடத்த, புதிதாக கூட்டுப்படை நடவடிக்கைப் பணியகம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் போரிட, பதினாறு ஆண்டுகளுக்கு முன், அன்றைய சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூட்டுப்படை நடவடிக்கைக் கட்டளைத் தலைமையகம் ஒன்றை அமைத்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை, முப்படைகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள ஏதுவாக இது அமைக்கப்பட்டது.

இன்று பதினாறு ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போதைய சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா கூட்டுப்படை நடவடிக்கைப் பணியகம் ஒன்றை உருவாக்கியிருக்கின்றார். அன்றிருந்த நிலைக்கும் இன்றைக்கும் இடையே பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன. தமிழர் போராளிகளின் வளர்ச்சி பிரமிக்க வைப்பது. விடுதலைப் புலிகளும் முப்படைகளையும் கொண்ட ஒரு நாட்டின் பாதுகாப்பு அணிகளாக வளர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

ஏற்கெனவே இருந்த கூட்டுப் படை நடவடிக்கை கட்டளைத் தலைமையகம் செயலிழந்துபோக, புதிதாக இவ்வமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதன் நோக்கம், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் கையில் இருந்து ஒவ்வொரு பொறுப்புக்களாகப் பிடுங்கி எடுத்து அவரை ஓரங்கட்டிவிடுவதுடன், முழு இராணுவ நடவடிக்கைகளையும் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்கத்துடன் சந்திரிகாவால் திட்டமிடப்பட்டதாகவே சொல்லப்படுகின்றது.



லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய

எது எப்படி இருந்தபோதும், ஒன்று மாத்திரம் தெளிவாகவே இருக்கின்றது. அதாவது சிங்களம் தோல்வியில் துவண்டு கொண்டிருக்கிறது. இராணுவ உயர்மட்டத்தில் குழப்பம், குளறுபடிகள் நிலவுகின்றன. ரத்வத்தையை ஆதரிக்கும் ஒரு கூட்டமும், சந்திரிகாவை ஆதரிக்கும் ஒரு கூட்டமுமாக பிளவுபட்டுக் கிடக்கின்றது சிங்களப்படைத் தரப்பு.

என்னதான் புதிய மாற்றங்களை ஏற்படுத்தினாலும், சண்டை பிடிக்கப் போவது அதே இராணுவத்தினரும், அதே விமானப்படையினரும், அதே கடற்படையினரும் தான் என்பதுடன், அவர்கள் சண்டை பிடிக்க வேண்டியவர்கள் அதே விடுதலைப் புலிகளுடன் தான் என்பதையும் யாராலும் மாற்றமுடியாது.

இடையிடையே புதிய சனாதிபதிகள் வந்து புதிதாக வருக்கக்கூடும், தமது வசதிக்கு ஏற்ற முறையில், கூட்டுப் படை நடவடிக்கைக் கட்டளைத் தலைமையகமோ அல்லது கூட்டுப் படை நடவடிக்கைப் பணியகமோ, எதுவானாலும் அமைத்துக் கொள்ள முடியும். ஆனால் எதார்த்தம் யாதெனில், ஒரு ஆக்கிரமிப்புப் படை, ஒரு விடுதலைச் சேனையுடன் அதிலும் உலகவரலாற்றில் தனக்கென ஒரு இடத்தை பதித்துக் கொண்டுள்ள விடுதலைப் புலிகளுடன் மோதுகின்றது என்பதே.

– சுப்பு –

அன்புள்ள மோகன்,

[illegible]




[illegible]



# அப்பாச்சி

"அப்பாச்சி செத்துப் போனவாம்"

அறிஞ்ச நாளில இருந்து ஒரே அழுகைதான். அப்பாச்சி எல்லாரிலயும் விட, என்னிலதான் நல்ல [illegible]. எதுக்கெடுத்தாலும் "பொடி பொடி" என்று தான் கூப்பிடுகிறவா. ஒருதருக்கும் தெரியாமல் பெத்தவளைக் கிழவி வீட்டை அப்பங்கள் வாங்கி வந்து மடியுக்க பொத்திப் பொத்தி வைச்சுத்தாறவா.

நான் அப்பாச்சியோட தான் படுக்கிறனான். அப்பாச்சின்ர தலையணையோடதான் தலை வைச்சுப் படுக்கிறனான். அப்பாச்சியின்ர தலையணை நல்ல குடு. இப்போதான் தலையணை மாதிரி இல்லை அப்பாச்சியின்ர தலையணை. பெரிய உரைப்பையுக்க பழஞ்சீலையள் எல்லாத்தையும் அடைஞ்சு அதைத்தான் தலையணையாப் பாவிக்கிறவா. [illegible]

[illegible]

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

பேராளியின் படைப்பு

# எதிர் நீச்சல்

திடீரென்று ஒரு நாள் அதிகாலையில் நேவி போட்டுகளும் பொம்மரும் வந்து அவனது ஊரை நோக்கி தாக்குதல் நடத்திய போதுதான் இவை அனைத்தும் நடந்தன. துணிவோடுதான் இருந்தான். இரவோடிரவாக கடற்கரையில் ஆமி இறங்கியதும் அவன் ஊரைவிட்டே இடம் பெயர வேண்டி ஏற்பட்டது. கையில் அகப்பட்ட சில நகைகளுடனும், பணத்துடனும் எல்லோரையும் போல, ஆமி அவ்வூரைவிட்டு சில நாட்களில் சென்றுவிட்டான். திரும்பி வந்து அவன் கண்டது சாம்பல் மேட்டைத்தான். அவனுக்கு மட்டுமல்ல அவனது ஊராட்கள் எல்லோரது றோலர்களும் வீடுகளும் சொத்துக்களும் எரிந்து சாம்பலாகி இருந்தன.

ஒரு பெரிய அலைவந்து கட்டுமரத்தில் மோதி அவனது உடம்பை நனைத்தது. நிமிர்ந்து பார்த்தான். நேவிக் கப்பல் அப்படியே நின்றது. சுந்தரம் இண்டைக்கும் தொழிலுக்குப் போகேலாது நான் வீட்டைபோறன். பக்கத்து கட்டுமரத்தில் இருந்தவர் கூறிக்கொண்டே வீடு நோக்கி நடந்தார். கட்டுமரத்தை இழுத்து மணலில் விட்டுவிட்டு வீடுநோக்கி நடந்தார்.

கடல் பழையபடி இருக்குது. கரை பழையபடி இருக்குது. ஆனால் இங்கிருந்த றோலர்களுக்குப் பதிலாக கட்டுமரமும் கல்வீட்டிற்குப் பதிலாக கொட்டில்களும் சந்தோசத்திற்குப் பதிலாக துன்பமும்தான் இப்ப இருக்கிறது. மீண்டும் ஒருதரம் கண்கள் நேவிக்கப்பலைப் பார்த்தன. அசைய மாட்டானா என்ற நப்பாசைதான்.

சேமித்து வைத்த பணம் எல்லாம் ஒருஅவு கரைந்து விட்டது. இரண்டாவது பிள்ளை பிறந்ததோடு ராணியின் நகைகளும் அடைவிற்குப் போய்விட்டன. தாலியும் கொடியும் தான் மிஞ்சி இருக்கிறது. இப்படியே சிலநாள் நீடித்தால் கொடியும் போய் விடும் எனும் நினைப்பு வந்தபோது ராணியை நினைத்து மனம் கலங்கியது. பாவம் அவள் என்னைநம்பி வந்தவளாயிற்றே குடும்பத்தைக் காப்பாற்ற உடம்பில் வலுவிருக்கிறது. ஆனால் இந்த கடற்தொழிலை விட்டால் வேறு என்ன தொழில் எனக்குத் தெரியும். சிறு வயது முதலே இதைத் தானே செய்கிறேன். படிப்பும் ஏறாமல் போய்விட்டது. கையெழுத்து வைத்து காசுக்கணக்கு பார்க்கமட்டும் ஓரளவு தெரியும். வேறு வழி? சில நாள் பார்த்துவிட்டு கூலி வேலைக்காவது போகவேண்டியதுதான்.


படலையைத் திறந்து வீட்டினுள் நுழைந்தான். வெறும் கையுடன் வீட்டில் நுழைவதை எண்ணி மனம் குறுகியது. அப்பா எனக் கூவியவாறே பெரியவன் வந்து காலைக் கட்டிப் பிடித்தான். ராணி சின்னவளைத் தூக்கியபடி வெளியில் வந்தாள். அவளை நினைத்துப் பார்க்க மனம் கூசியது. குனிந்தவாறே உள்ளே நுழைந்தான். தலையில் நிலை இடித்தது. தனது பழைய கல்வீட்டை நினைத்தான். நடுவில் இருந்த வாங்கு ஒன்றில் அமர்ந்தான்.

கறிக்குக்கூட மீன் பிடிபட இல்லையோ ராணி ஆவலுடன் கேட்டாள்.

கடலுக்கு ஒருதரும் போகவில்லை சோகமாக பதில் வந்தது.

சீ, கறிக்குக்கூட மீன் இல்லாமல் இருக்கவேண்டியிருக்கு. முந்தி எவ்வளவு மீனை எத்தனை பேருக்கு காசில்லாமல் கொடுத்திருப்பன், விதியை நினைத்து மனதுக்குள் சிரித்தான். வீட்டிலிருக்க விருப்பமின்றி எழுந்து வெளியே சென்றான். ராணி சாப்பிட்டு விட்டுப் போங்கோ என்று சொல்வது கேட்டது. அவன் கேளாத மாதிரி வெளியேறினான். அவன் போவதையே பார்த்தவாறு வாசலிலேயே குந்தினாள் அவள்.

கால்போன போக்கில் நடந்தான். வழியில் ஒரு கொட்டிலில் இருந்து சிலபேர் கள்ளுக்குடிப்பதைக் கண்டான். போதை ஏறினால் துன்பம், கவலை ஒன்றும் தெரியாது என் பார்களே கண்கள் கொட்டிலை நோக்கின. சீ, என்ன நினைப்பு எனக்கு மட்டுமா கவலை, இந்த நாட்டில் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்கள்தானே. நான்



கவலையை மறக்கலாம், பாவம் ராணி என்ன செய்வாள்? கால்கள் மீண்டும் கடற்கரையை நோக்கிச் சென்றன.

அந்த நேவிக் கப்பல் இன்னும் அதே இடத்தில் நின்றது. கொஞ்சம் உயரப்போனால் என்றால் கூட கொஞ்சத் தூரத்திலயாவது வலை வீசலாம் இதென்டால் கடலுக்குள்ள இறங்கினா கடுற தூரத்தில நிற்கிறானே? மனம் அலைமோதியது. அங்கிருந்த கொட்டில் ஒன்றில் அப்படியே தூங்கிப் போனான்.

இருட்டிய பின்புதான் வீட்டினுள் நுழைந்தான். ராணி பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொண்டிருந்தாள். பசி வயிற்றைக் கிள்ளியது. அவளுடன் எதும் கதைக்காமலே சாப்பிட்டு விட்டு உறங்கிவிட்டான். அதிகாலையிலேயே கண்விழித்தான் ராணியைத் திரும்பிப் பார்த்தான், அவள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். பிள்ளைகளும் சுருண்டு படுத்திருந்தனர். வெளியில் குருவி கீ..கீ.. என்று கத்தியது. தூரத்தில் நாயொன்று ஊளையிட்டது. கடல் ஆர்ப்பரிக்கும் சத்தம் கேட்டது. சத்தமிடாமல் எழுந்தான். கடற்கரையை நோக்கி நடந்தான்.

கடவுளே நேவிக்காரன் நிற்கக் கூடாது. மனம் ஆண்டவனை நினைத்து இறைஞ்சியது. கடலைப்பார்த்தான், இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. ஒருவேளை அங்கேயே நிற்கிறானோ கடற்கரையில் இருவர் தங்கள் கட்டு மரத்தைத் தள்ளுவது தெரிந்தது. அவர்களை நோக்கி நடந்தான்.

ஆர் சிவசம்பு அண்ணையோ? கடலுக்கை நேவிக்காரன் இல்லையோ நல்லதொரு பதிலுக்காக சுந்தரம் அவர்களை நோக்கினான்.

அட சுந்தரமே நேவி போட்டானப்பா இரவு பத்துமணிபோல கிழக்குப்பக்கமா லைற் போட்டுக் கொண்டு போனவன் சாதகமான பதில் வந்தது.

அவன் அடுத்த தரம் வாறதுக்கிடையில் ஏதாவது பிடிக்கவேணும் இன்னொருவர் கடலுக்குப்போற அவசரத்தில் சொன்னார்.

சுந்தரத்தின் கால்கள் கட்டுமரத்தை நோக்கி ஓடின. மரத்தின் கட்டுகளைச் சரிபார்த்தான். தன்னந்தனியாக மணலிலிருந்து மரத்தை இழுத்தான். உடலின் தசைகள் திரண்டு எழுந்தன. அவசரத்தோடு கடலுக்குள் இறங்கினான். அலை ஒன்று வந்து மரத்தைத் தூக்கியது. சமாளித்துக் கொண்டு உள்ளே ஏறினான். மனது சந்தோஷத்தால் துள்ளியது. ராணியை நினைத்தான். நேற்றும் அவளோட சரியாக கதைக்கேல, பாவம் அவள் கவலை நினைவிற்குத் திரும்பினான்.

துடுப்பை எடுத்து வலிக்கத் தொடங்கினான். முன்பு றோலர் எஞ்சினை இயக்கி ஓடியதை நினைத்து மனம் வருந்தியது. சீ ஒரு சிறிய எஞ்சின் இருந்தாலாவது மரத்துக்குப் பூட்டலாம் என எண்ணினான். கை இருபக்கத்திற்கும் மாறி மாறி வலித்தது. கட்டுமரமும் மேலே மேலே சென்றது. முகத்தில் வடிந்த வியர்வையை துடைத்து எறிந்தான். கை சோர்வடைவது போலிருந்தது. கைக்கு ஓய்வு கொடுத்தான். கடல் நீரை அள்ளி வாய் கொப்பளித்தான். மீண்டும் கை இயங்கியது.

நங்கூரத்தை எறிந்தான். வலையை எடுத்து வீசினான். பூப்போன்று விரிந்த வலை களக் என்ற சத்தத்துடன் நீரில் விழுந்தது. காத்திருந்தான். இன்னும் இருள் அகலவில்லை. காதைத்தீட்டி எதும் சத்தம் கேட்கிறதா என அவதானித்தான், ஒன்றும் இல்லை. வலையை மெல்ல மெல்ல இழுத்தான். மீன்கள் பளிங்குக்கட்டிகளாக வந்தன. மனம் ஆனந்தத்தால் துள்ளியது. இரண்டு மூன்று நாட்கள் ஒன்றுமில்லாமல் கிடந்ததற்கு பரவாயில்லை. ஒரு கூடை மீன் வந்தது. நாற்றைம்பது ரூபாவிற்காவது விற்கலாம், கற்பனையில் மிதந்தான். இன்னும் இரண்டு மூன்று தரம் வீசினான். விடிந்துவிடும் அதற்குப்பிறகு போவம். அடுத்த தரம் வீசினான். காத்திருந்தான் நிமிடங்கள் கழிந்தன.

தூரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. காதைத் தீட்டினான். நேவிதான் மனம் உசார் என்றது. அவசர அவசரமாக வலையை இழுத்தான். ஏதேதோ மீன்கள் வந்தன. சத்தமும் கிட்டக்கேட்டது. நங்கூரத்தை இழுக்க நேரமின்றி வெட்டி விட்டான். கை இயங்கியது. வேகமாக வேகமாக என்றது மனம். பட்... பட்... பட்... பட் வெடியோசை அதிர்ந்தது. தலைக்கு மேல் வெளிச்சங்கள் பறந்தன. நேவி போட்டிலிருந்து பாய்ச்சப்பட்ட ஒளி சுந்தரம் மீதும் விழுந்தது. ஒரு செக்கன்தான். ரவைகள் இவனை நோக்கி சீறின. கட்டுமரத்தை விட்டு கடலில் குதித்தான்.

நீந்தினான். கை சோர்ந்தது. கால் உளைவு எடுத்தது. தண்ணீரில் மூழ்குவதுபோல் உணர்ந்தான். ராணியினதும் பிள்ளைகளினதும் உணர்வு எழுந்தது. நான் இல்லாவிட்டால் யார் அவர்களைக் காப்பாற்றுவது? புதிய தெம்பு வந்தது. நீந்தினான். காலை அடித்தான், சூரியன் மேலெழுந்து வந்தது. கரையை வந்தடைந்தான்.

கரையில் எங்கும் சனங்களாக இருந்தது. அக்கூட்டத்திலிருந்து ராணி அவனை நோக்கி ஓடிவந்தாள். சந்தோசம் கரைபுரண்டோடியது. எல்லோருமே பிரச்சனை இன்றி கரை வந்து சேர்ந்தனர். உடமைகள் மட்டும் வரவில்லை. கடலைப்பார்த்தான். நேவிபோட் ஒன்று அங்குமிங்குமாக ஓடித் திரிந்தது. அதைப்பார்க்க ஆத்திரம்தான் வந்தது. வலையில் அகப்பட்ட மீன்களை எண்ணிப் பெருமூச்சு விட்டான். இன்றைக்கும் இப்படியாகப் போய் விட்டதே மனம் ஓலமிட்டது.

ராணியை வீட்டுக்கு அனுப்பி விட்டு கடற்கரையோரமே நின்றான். அவனது கட்டுமரம் ஒவ்வொரு துண்டுகளாக மிதந்து வந்தது. தேடித் தேடி நான்கு துண்டுகளையும் ஒன்றாக்கினான். மீண்டும் மரத்தைக் கட்டினான். கட்டுமரம் பழைய நிலைக்கு வந்தது. மீண்டும் வலையில் அகப்பட்ட மீன் ஞாபகத்துக்கு வந்தது. கடலைப்பார்த்தான் நேவிபோட் தூரப் போய்க் கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு கொட்டிலில் போய் தூண்டிலும் தங்கூசியும் எடுத்தான். கரையில் புழுத்தோண்டினான். திரும்பவும் கடலைப் பார்த்தான். நேவிபோட் தூரத் தெரிந்தது. ஆத்திரம் வந்தது [illegible] மரத்தை கடலை நோக்கித் தள்ளினான்.

எனது கடல் எனது முன்னோர்கள் வாழ்ந்த கடல் எனக்கு சொந்தமான கடல் எங்கள் கடலில் இவன் யார் எனைத்தடுக்க? மனம் ஓலமிட்டது. கடலை நோக்கி மீண்டும் அவனது வாழ்க்கையும் நினைவுகளும் நகரத் தொடங்கியது.

•••

- சி.சுரேஷ் -

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்திஐந்தின் தொடர்ச்சி

கொல்லப்பட்டவர்களின் தொகையில், 10 இலட்சம் போலந்து யூதர்களும், ஐம்பதினாயிரம் ஜெர்மனிய யூதர்களும், 1 இலட்சம் டச்சு யூதர்களும், ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பிரெஞ்சு யூதர்களும், ஐம்பதினாயிரம் ஆஸ்திரிய, செக்கோஸ்லாவியா யூதர்களும், ஐம்பதினாயிரம் கிரேக்க யூதர்களும், இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் பல்கேரிய, இத்தாலிய, யூகோஸ்லாவிய, றுமேனிய யூதர்களும், இரண்டரை இலட்சம் ஹங்கேரிய யூதர்களும் அடங்கும் வகையில் பேர்க்கினோவில் கொல்லப்பட்டவர்களின் தொகை உயர்ந்துகொண்டே போயிற்று ஒவ்வொரு நாளும், முற்றாக அழிவேற்படுத்துதலை நோக்கி நடந்து கொண்டிருந்த மனிதத் தன்மையற்ற ஓட்டத்துக்கு நடுவே, புதிய புதிய சொண்டர்கள் கொமாண்டோசுக்கான அழைப்புகள் வந்து கொண்டேயிருந்தன.

**கார்த்திகை 1944**

போலி நோட்டுகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை திடுதிப்பென ஒரு நாள் மூடப்பட்டு, எல்லோரையும் சொண்டர் கொமாண்டோசாக வேலை செய்ய பேர்கினோவுக்கு அனுப்பிவிட்டனர். விஷவாயுமூலம் கொலை செய்து முடியும்வரை கூடங்களின் இடைவெளிகளில் காத்து நிற்பது டொவ்வின் புதிய வேலையாயிற்று அவனும் வேறு சொண்டர் கொமாண்டோக்களும் வேதனையில் கிளம்பும் கூக்குரல்களும் அவதியில் இரும்புக் கதவுகள் தட்டப்படும் ஓசைகளும் அடங்கும் வரை காத்திருப்பர். இன்னும் பதினைந்து நிமிடங்கள் விஷவாயு கூடங்களில் இருந்து அகலும் வரை காத்திருப்பர் பிறகு விஷவாயுக் கூடங்களின் கதவுகள் திறக்கப்படும். டொவ் உள்ளுக்குப்போய், கயிறுகளையும், கொழுக்கிகளையும் பாவித்துப் பின்னிப்பிணைந்து கிடக்கும் கைகளையும் கால்களையும் விலக்கி சடலங்களை எரிகூடங்களுக்கு அனுப்புவதற்காக வெளியே கொண்டு வரும் வேலையில் ஈடுபட வேண்டும். சடலங்கள் அகற்றப்பட்ட பிறகு, அவன் உள்ளேபோய் நீரினால் அறையைக் கழுவி உடுப்புமாற்றும் அறைகளிலே தயாராக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அடுத்த தொகுதி ஆட்களுக்காக தயார்ப்படுத்த வேண்டும்.

மூன்று நாட்கள் இந்த கொடூரமான வேலையை டொவ் செய்தான். அவனது சக்தியை பெருமளவு இந்த வேலை உறிஞ்சி விட்டது. சீவிக்கவேண்டும் என்ற பிடிவாதமான தோற்கடிக்க முடியாத எண்ணத்தை போஷித்து வந்த மன உறுதி இப்போது தளர்ந்து வந்தது. அந்த இரும்புக் கதவுகள் திறக்கப்பட்டு பின்னிப் பிணைந்து கிடக்கும் சடலங்களை நேருக்கு நேராக காணும் நேரத்தை நினைத்து மிகவும் கிலேசமுற்றான். அவன் வார்சோ சேரியை அல்லது கழிவுநீர் சாக்கடையை நினைத்துக்கூட அவ்வளவு கிலேசமுற்றதில்லை. அவனுக்கு ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அதிககாலம் இப்படி அடிக்கடி சடலங்களைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பதே அது.

இப்படியிருக்கையில் வியப்பளிக்கும் விஷயம் ஒன்று நடந்தது.

எரிகூட அடுப்புகளைச் கழற்றி விஷவாயுக் கூடங்களை வெடி மருந்து வைத்துத் தகர்த்து விட ஜெர்மனியர் உத்தரவிட்டனர். நேசநாட்டுப்படைகள் மேற்கிலிருந்தும் ரஷ்யப்படைகள் கிழக்கிலிருந்தும் முன்னேறி வந்து கொண்டிருந்தார்கள். இப்போது தங்கள் குற்றச் செயல்களை மறைக்க நாசிகள் படாதபாடுபட்டார்கள். உடல்கள் போட்டப்பட்ட சவக்குழிகள் போலந்து எங்கும் தோண்டப்பட்டு எலும்புகள் நொறுக்கப்பட்டு வீசி எறியப்பட்டன. அத்தியாவசிய சேவைகட்கு அவசியமாயிருந்த வாகனங்கள் யூதர்களை அவசரம் அவசரமாக ஜெர்மனிக்குள் கொண்டு செல்ல உபயோகப்பட்டன.

**தை 22, 1945**

ரஷ்ய இராணுவம் ஓச்விற்சுக்குள்ளும் பேர்க்கினோவிற்குள்ளும் நுழைந்து அவர்களை விடுவித்தது கொலை செய்யும் வெறியாட்டம் முடிந்தது. 35 இலட்சம் போலந்து யூதர்களில் உயிரோடிருந்த ஐம்பதினாயிரம் யூதர்களில் பதினைந்தே வயதான டொவ் லண்டவ்வும் ஒருவனாயிருந்தான். அவன் தன் சகோதரனுக்குக் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றி இருந்தான்.

### அத்தியாயம் இருபத்தியாறு

வருடக்கணக்கான துன்பங்கட்கும் தண்டனைகட்கும் மத்தியில் நிரந்தரமான சேதாரங்கள் எதுவுமின்றி அவன் பிழைத்திருக்க முடிந்தது பற்றி டொவ்வைப் பரிசோதித்த ரஷ்ய டாக்டர்கள் வியந்து போனார்கள். அவன் பலவீனமானவனாகவும் வளர்ச்சி குன்றியவனாகவும் இனி ஒருபோதும் நிறைவான ஆற்றலைக் கொண்டிருக்க முடியாதவனாக இருந்தாலும் தகுந்த கவனிப்புடன் நியாயமான அளவு நல்ல நிலைக்கு அவனை மீட்டெடுக்க முடியும் எனக் கருதினார்கள்.

இவனது மனதுக்கு நடந்திருந்த பாதிப்பு வேறு விடயம். அவனது விடாப்பிடியான ஆற்றலாலேயே இந்தப் பையன் சீவித்தான். ஆறு வருட கால தொடர்ச்சியான துன்பத்துக்குப் பிறகு இப்போ அவன் ஆறியிருந்தான். அல்லும் பகலும் அவன் மூளையில் நினைவு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அவன் சிடுசிடுப்பான பையனாக, துக்ககரமான தோற்றத்துக்குள் மூழ்கிக் கொண்டிருந்தான். அவனது மனநிலை சுவாதீன நிலைக்கும் சுவாதீனமற்ற நிலைக்கும் இடையேயுள்ள அந்த மெலிதான எல்லைக் கோட்டில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

முட்கம்பி வேலிகள் பிய்த்து எறியப்பட்டு, விஷ வாயுக் கூடங்களும் இல்லாது போய் விட்டன. ஆனால் ஞாபகங்கள் அவனை விட்டுப்போகவில்லை. அந்தப் பயமூட்டும் நாற்றம் எப்போதும் தன்னைச் சூழ்ந்துகொண்டிருப்பதுபோல் உணர்ந்தான். அந்த இலக்கம், பச்சை குத்தப்பட்ட கையைப் பார்க்கும் போதெல்லாம் அந்த இரும்புக் கதவுகள் திறக்கப்படும் அந்தப் பயங்கரமான கணத்தில் மீண்டும் மீண்டும் சீவிப்பது போலிருக்கும். திரும்பத் திரும்பத் தாயும், ருத்தும் ரெப்லிங்காவின் [illegible] போன்ற விஷவாயுக் கூடங்களில் இருந்து கொண்டு கொல்லப்படுவதை மானசீகமாகக் கண்டான். திரும்பவும் திரும்பவும் வார்சோவின் சேரி காப்பரனுள் நடுங்கும் மெழுகு திரி ஒளியில், புகைத்துகொண்டிருக்கும் சடலங்களிடையே எது மண்

- லியோன் யூரிஸ் -

டெக்கின் சடலமாயிருக்கும் என யோசித்துக் கொண்டு தேடிய காட்சி நிழலாடியது. ஜெர்மனியர்கள், கடதாசிகளுக்கு பாரம் வைக்கப் பாவித்த கபாலங்கள் தன் தாயுடையதும் ருத்துடையதும்தான் என்பதுபோல அவன் திரும்பத் திரும்ப நினைவுறுத்திக் கொண்டான்.


ஓச்விற்சில் எஞ்சியிருந்த யூதர்கள், அங்கிருந்த பல குடியிருப்புக்களில் ஒன்றாகக் கலந்திருந்தனர். சித்திரவதைகளும் வேதனைகளும் இல்லாத ஒரு உலகம் இருப்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. உணவும் களிப்பும் அன்பும் உள்ள உலகம் அவனுக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. ஜெர்மனியர்கள் சரணடைந்துவிட்ட செய்தி கூட, ஓச்விற்சில் மகிழ்ச்சிக் காட்சிகளை ஏற்படுத்த முடியவில்லை. ஏனெனில் வெற்றியில் அவர்களுக்கு மகிழ்ச்சி இருக்கவில்லை.


டொவ் லண்டவ்வின் நினைவலைகள் அவனை வெறுப்பில் நாட்டம் கொண்டவனாக மாற்றின. விஷவாயுக் கூடங்கள் இல்லாது போய்விட்டது பற்றி மிகவும் கவலைப்பட்டான். இருக்கிருக்கால் என்னென் துருப்புக்களையும் அவர்களுடைய நாய்களையும் எப்படி அவற்றுள் நடத்திச் செல்லலாம் என மனதாலேயே நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

போர் முடிந்துவிட்டாலும் ஒருவருக்கும் என்ன செய்வது எங்கு போவது என்று தெரியவில்லை. வார்சோவுக்கு இது நூற்றி அறுபது மைல் தூரத்தில் இருக்கிறது. வீதிகளும் அகதிகளால் நிரம்பி வழிந்தன. வார்சோவுக்கு அவனால் போக முடிந்தாலும் அதற்குப் பிறகு..? வார்சோவின் சேரி சிதைவுகளாகி விட்டது. தந்தை, தாய், சகோதரிகள் ஒருவருமில்லை. எல்லோரும் இறந்து போய்விட்டார்கள். தொடர்ந்து பல நாட்களுக்கு யன்னலோடு அமர்ந்து ஒரு வார்த்தைகூடப் பேசாது நேரத்தைச் செலவிட்டான். சைலேசியன் இராமப் புறத்தை நீண்டதாக மூடிக் கொண்டிருந்த மரணக்கம்பளத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

ஒருவர் பின் ஒருவராக ஓச்விற்சின் யூதர்கள் மெது மெதுவாக முகாமின் வெளியே தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். ஆயினும் ஒருவர் பின் ஒருவராக இறுதி ஏமாற்றத்துடன் ஓச்விற்சுக்கே திரும்பி வந்தனர். ஜெர்மனியர்கள் போய்விட்டார்கள். ஆனால், போலந்துக்காரர்கள் அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடங்கியிருந்தார்கள். கொலைசெய்யப்பட்ட 35 இலட்சம் பேருக்காக போலந்துக்காரர்கள் குரல் எழுப்பவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக நகரங்களில் சுவரொட்டிகள் நிறைந்திருந்தன.

மக்களும் கூக்குரலிட்டனர். அவர்களில் "யூதர்களே இந்தப் போரை எங்கள் மேல் கொண்டுவந்தார்கள்." யூதர்கள் வாயடைத்தவர்களாகவே இந்தப் போர் ஆரம்பிக்கப்பட்டது. "எங்களுடைய பிரச்சினைகளுக்கெல்லாம் யூதர்களே காரணம்!" என்ற கோசங்கள் மேலோங்கியிருந்தன. இறந்தவர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்தானும் சிந்தப்படவில்லை. ஆனால் தப்பிப்பிழைத்திருந்த சிறியளவு யூதர்கள் மேல் வெறுப்பு ஏராளமாகக் காட்டப்பட்டது. யூதர்களது கடைகளை உடைத்து, தங்கள் வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் திரும்ப முனைந்த யூதர்களை அடித்து நொருக்கினார்கள்.






தொடரும்...

TamileelamArchive

# குரலெதுவும் கேளாத அந்தப் பெருவெளியில்.....

நாயன்மார்கட்டுக்கும்
நாவற்குழிப் பாலத்திற்குமிடையில்
நிலவு நிர்வாணமாகி முழுகும் நாளில்
செம்மணி சந்தனம் பூசிச்
சாமவிரிப்பில் காற்றைப் புணரும்.
வரவேற்பு வளைவின் கீழே
யாருமற்ற ராவிலும்
நுழைவாயிற் பிள்ளையார் காவலிருப்பார்.
அவலக்குரலெடுத்துக் கத்தும் ஆட்காட்டி
வளைவிட்டு வெளியேறிவந்து
விளையாடும் சிறுநண்டு..
உயிரணையும் ஒளியுமிழும் லாந்தர்.
கிடாய்ப் பீஜமெனக் கீழேயாடக்
கிடுகேற்றிவரும் வண்டில்கள்
சாக்கால் போர்த்திய சாரதியின் காத்தான்பாட்டு
ஊரெல்லைவரை வந்து உரசிப்போகும்.
எந்த நேரமும் தணல் பூத்துக் கிடக்கும்
அந்தச் சுடலை.
உப்புநீரிலவிந்த சாதாளை வெடில்
குப்பென்று மூக்கிலடிக்கும்.
எல்லாவற்றையும் ஏற்றந்தத் தெரு
தனியாகத் தபசியற்றும்
இரவானால் எவருமிரார்.
ஓரிருவர் போவார் வருவார்.
அவர்களும் அம்புருவும் வேகத்தில்.
ஊசிபோலேறும் மார்கழியிரவில்
வீசும் காற்றுமட்டும் பேசும்.
எட்டுமணிக்குள்ளே எல்லாமடங்கி
வீதி வெறிச்சோடிவிடும்.
இரவானால்
எவரையும் கொல்லவும் புதைக்கவும்
செம்மணியே சிறந்த இடம்?
கொல்களத்தின் குரலெதுவும் கேளாது
அந்தப்பெரு வெளியில் அடங்கிவிடும்.
குழிவெட்டிப் புதைக்கவும் இலகு.
நாலு வெட்டு வெட்டினால்
நானூறுபேரைப் புதைக்கக்கூடிய
ஆழக்குழிவரும் ஈரப்பதம்
செம்மணியைத் தெரிவு செய்தவனுக்கு
வீரப்பதக்கம் வழங்கலாம்.
சரியான தேர்வு.
அவர்களுக்கென்ன அடக்கம் முடிந்த
அசதிமட்டும்தான்.
எங்களுக்குத்தான்
உறவுநூலிழை அறுந்த துயரம்.
கொண்டுகொண்டு வந்து புதைத்தபோது
கண்டிருப்பாய் காற்றே.
என்ன நடந்தது?
சிறுநண்டே உனக்குத் தெரிந்திருக்கும்.
யார் யாரைப் புதைத்தார்கள் இங்கு?
வானத்திலிருந்தாயா நிலவே
ஏனெம் உறவுகளை இடுகுழியிட்டார்?
உள்ளே கொதிப்புறும் ஒருவன் கேட்கிறேன்
சொல்லுங்கள் ஏன் புதைத்தார்கள்?
வில்லங்கம் ஏனென்று நீங்களும் விடுவீரானால்
எல்லோரும் சேர்ந்து இதையும் மறைத்துவிட்டு
நல்லோராய் மீண்டும் நடமாடித் திரிவார்.
சொல்லுங்கள்.
என்று புதைத்தார்கள்?
எங்கு புதைத்தார்கள்?
எவரெவரைப் புதைத்தார்கள்?
என்னசெய்து புதைத்தார்கள்?
காற்றையும் ஆற்றுப்படுத்தவல்ல கவிஞர்களே?
"வானம்பாடிக்கு" வரியெழுதி அனுப்புகின்ற
பென்னம்பெரிய புலவீரே;
துயிலெழும்பித் தொலைக்காதீர்;
இன்னும் கண்வளர்வீர்.
அந்தரப்பட்டு அடித்தெழுப்பித்தான்
என்னகாணும் ஆகும்?
நெடிய தூக்கத்திலிருந்து நீரெழும்பி
என்னகாணும் பண்ணுவீர்?
கவிதை எழுதுவீர்.
அவ்வளவுதானே.
அதற்கிப்போ என்ன அவசரம்?
எம்மால் முடிந்தது இவ்வளவுதானென்
உரித்துக் காட்டி விடாதீர்
சிரிக்கும் உலகம்.
செம்மணியில் நானூறு புதைகுழிகள்
கவிதைக்குக் கருக்கிடைத்து விட்டது.
ஊரடங்க வாழ்வும் உவப்பானது.
எழுதத் தொடங்கி விடுவீர்.
ஐயா சாமிகளே அவர்களை விட்டுவிடும்.
புதைந்தவர்கள் புதைந்தவர்களாகவே போகட்டும்.
தோண்டியெடுத்துங்கள் போலிக்கவிதைகளைப் போர்த்தி
மீண்டும் புதைக்காதீர்.
கவிதைக்காரர்களே;
கையிற் காற்சிலம்புடன்
மதுரையெரித்தவளுக்கிருந்த மாகோபத்துடன்
முதலில் வீதியில் இறங்குங்கள்.
மண்வெட்டி பிக்கானுடன் தரவையைக் கிளறுங்கள்.
ரவைகளுக்குப்பயந்து இரவுகளுக்குள் ஒழிக்கும்
வாழ்வையுடைத்துத் தெருவில் இறங்குங்கள்.
கம்பிவேலிகளும் சென்றிகளும் சிதறச்
செம்மணித் தெருவை நிறையுங்கள்.
புதைகுழிக்கானது கவிதைதானெனில்
அதைமுதலில் தீயிடுங்கள்.
ஆட்காட்டிப்புள்ளே! கவிஞர்கள் வருவர்.
கூப்பாடு போட்டபடி ஒரு கூட்டமே வரும்.
அசுர விரிப்பை எரித்தபடி
விரைந்து வரும் கும்பல்.
புதைத்த இடங்களைக்காட்டு தோண்டட்டும்.
கவிதை மட்டுமே இயலுமெனக் கூறில்
பாடவிடு
அவர்கள் பாடித் தொலைக்கட்டும்.




**-புதுவை இரத்தினதுரை-**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1999ம் ஆண்டு மிகமிக முக்கியமான ஆண்டாக அமையப்போகிறது. உரிய தருணத்தில் மூன்றாம் தரப்பு பேச்சுவார்த்தை குறித்து பரிசீலிப்பேன் என இந்தியாவில் வைத்து பத்திரிகையாளர்களுக்கு சிறிலங்கா ஜனாதிபதி கூறிய நா ஈரம் உலரு முன்பே நத்தாண்டியாவில் வைத்து தனது படைகள் இவ்வாண்டுக்குள் யுத்தத்தை முடித்து வீடு திரும்பி விடும் என வழமை போல் சிங்களப் பேரினவாதத்திற்கு சந்திரிகா நெய்யூற்றி உள்ளார். பேரினவாதிகள் அகம் மகிழத் தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதின் மூலமே அமைதியை ஏற்படுத்தப் போவதாக கூறிய சந்திரிகா தமிழ் மக்கள் மேலான மற்றொரு பாரிய யுத்தத்திற்கான முன்னறிவித்தலை இதன் மூலம் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார். இதற்கு ஆயத்தமாக சிறிலங்காப் பாதுகாப்புப் படைகளின் கூட்டுத் தலைமையகத்தை முற்று முழுதாக தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான பதவிமாற்றங்களையும் செய்துள்ளார். இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது ரத்வத்தையின் பாதை திறப்பு யுத்தத்தில் ஏற்பட்ட படுதோல்விகள் புகட்டிய பாடங்களை மறந்தவராக அல்லது மறைத்தவராக மற்றொரு புதிய யுத்தத்திற்கு சந்திரிகா தயாராகி நிற்கின்றார். எங்கு எப்பொழுது எம் மக்களின் மேல் சந்திரிகாவின் இனஅழிப்பு நோக்கிலான யுத்தம் ஆரம்பிக்கப்படலாம் என்ற ஏக்கத்துடன் பொங்கல் பானையில் அரிசியிட்டு ஏங்கி நிற்கும் பொங்கல் விழாவாக இவ்வாண்டு பொங்கல் அமைகிறது.

ஆயினும் தேசவிடுதலையை உயிரிலும் மேலாக நேசிக்கும் தமிழீழ மக்களின் தியாக சேனையான தமிழீழ விடுதலைப்புலிகளின் பலத்தையோ அல்லது மன உறுதியையோ உசுப்பும் சக்தி கூட சந்திரிகாவின் படைகளுக்கு இல்லை என்பதை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் கடந்த கால வரலாறு உலகிற்கு மிகத் தெளிவாக்கி நிற்கிறது. சந்திரிகா இராஜதந்திர ரீதியாக விடுதலைப்புலிகள் குறித்து உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பி தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை பாதுகாப்பு நடவடிக்கையாக காட்ட எடுத்த பெரும் முயற்சிகளும் பெரும்பாலும் இன்று பிசுபிசுத்து விட்டது. இதனால் புதிய போர் முனையையும் புதிய பிரச்சார தந்திரங்களையும் மேற்கொள்ளும் அவசர நடவடிக்கைகளில் சந்திரிகா இறங்கியுள்ள நிலையில் புதிய ஆண்டு தொடங்கியுள்ளது.

இவ்வாண்டில் சந்திரிகா பிரித்தானிய ஹெர்குலிஸ் இராணுவப் போக்குவரத்து விமானங்கள் மூன்றை அவசரம் அவசரமாக வாங்கியுள்ளார். இதன் மூலம் தனது படைகளுக்கு தடைப்பட்டு வரும் வழங்கல்களை வேகப்படுத்த சந்திரிகா திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் குறிப்பாக யாழ்குடாநாட்டில் தனது படைகள் பொறிக்குள் சிக்குண்டு தவிக்கும் நிலையை மாற்றி அவர்களுக்கு வழங்கல்களை சீராக்கி விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த தாக்குதல்களினால் தளர்ந்து உளக்கோளாறுகளால் போராடும் ஆற்றலை இழந்து வரும் தன் படை அணிகளுக்கு ஒட்சிசன் அளித்து வேகமாகப் போராட வைக்கலாம் என்பது சந்திரிகாவின் பகற்கனவு. அத்துடன் தரையணி நகர்வுகளில் நினைத்துப் பார்க்காத அளவுக்கு படுதோல்விகளை மட்டுமல்ல பலத்த ஆளணி இழப்புக்களையும் சந்தித்த சிறிலங்கா இனி மேலும் தரைநகர்வுகள் மூலம் இராணுவ நடவடிக்கைகளை நடாத்தி தனக்குப் பாரிய அழிவுகளை ஏற்படுத்தாது மக்கள் குடியிருப்புக்கள் மீதான வான்வழித் தாக்குதல்களை எறிகணைத்தாக்குதல்களை வேகப்படுத்தி இனஅழிப்பு மூலம் தனது இராணுவ ஆக்கிரமிப்பினை நிலைநிறுத்த முயலும் ஆண்டாக இவ்வாண்டை சந்திரிகா மாற்றக் கூடும் என்ற ஊகம் பலமாக உள்ளது. ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்பு அணிகளின் பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது என்பதைச் சுட்டிக்காட்டும் ஆய்வாளர்கள் இதனை எதிர்கொள்ள சிறிலங்கா தனது விமானப்படையை மேலும் மேலும் நவீனப்படுத்த பெருமளவு பணத்தை செலவிட வேண்டும் எனவும் எதிர்வு கூறியுள்ளனர். அதேவேளை அவ்விதம் செலவிட்டு வாங்கப்படும் நவீனத்துவங்களும் விடுதலைப் புலிகளினால் அழிக்கப்படுவதற்கும் – விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ச்சியுற்று அவர்களை மேலும் பலப்படுத்துவதற்கும் சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளது என்பதையும் அவதானிகள்



# அங்கீகாரமே அமைதிக்கு வழி

சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் இராணுவத் தீர்வு என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது என்பதை வலியுறுத்தும் ஆய்வாளர்கள் ஆயினும் சிறிலங்கா இராணுவத் தீர்வில் தனது வெற்றியை நிலைநாட்ட சர்வதேச சட்டங்களுக்கு எதிரான வகையில் பிறநாடுகளின் நேரடி மறைமுக இராணுவ அரசியல் தலையீடுகளை ஊக்கப்படுத்தலாம் எனவும் இதனால் தென்னாசியாவின் பாதுகாப்பு மட்டுமல்ல உலகின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எதிரான அச்சுறுத்தல்கள் எந்நேரத்திலும் எதிர்பாராது எழக்கூடிய நெருக்கடிப் பிரதேசமாக இலங்கைத் தீவு சிறிலங்காவால் மாற்றப்பட்டு வருகிறது என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்நிலையில் தமிழீழப் பிரச்சினை 1999ம் ஆண்டின் உலகின் முதன்மைப் பிரச்சினைகளில் ஒன்றாக சர்வதேச நாடுகளினால் எடுத்து நோக்கப்பட வேண்டும் என்னும் கருத்து புலம்பெயர் தமிழர்களால் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

மனித உரிமைகள் உலகில் நாடுகளின் ஜனநாயகத் தன்மையினை மதிப்பிடுவதற்கான அளவுகோல் என்ற ரீதியில் பார்த்தாலும் சிறிலங்கா உலகின் மோசமான மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தி நிற்கிறது. இது யுத்தத்தினால் ஏற்பட்ட ஒன்று என்பதை விட தமிழ் மக்களை இனஅழிப்புச் செய்ய வேண்டுமென்ற சிறிலங்காவின் அரசியல் திட்டத்தின் செயல்வடிவம் என்பதை சிறிலங்காவின் அரசியல் செயற்திட்டத்தினை எடுத்து நோக்கும் எவருக்கும் இலகுவில் புரியும். இந்த இன அழிப்பு அரசியல் செயற்திட்டத்தின் வடிவுகளில் ஒன்றாக தமிழீழ மக்கள் மீதான உணவுத்தடை, மருந்துத் தடை, கல்வித் தடை என்பன அமைந்துள்ளன. இதனால் தமிழீழ மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் 2வது உலகயுத்தக் கொடுமைகளை விட –ருவண்டாவின் கதைகளை விட கொடுமையானவையாக உள்ளன. மனித நாகரீக வாழ்வுக்கே அவமானத்தை ஏற்படுத்தும் சிறிலங்காவின் இந்தக் கொடுமைகளில் சில வெளிவந்தும் கூட (செம்மணிப் புதை குழிகள், வன்னிப் பட்டினி நிலைகள் போன்றவை) அவை குறித்த சர்வதேச அமைப்புக்களின் மௌனம் உலகில் சர்வதேச அமைப்புக்களின் நேர்மையிலும் ஆற்றலிலும் சந்தேகத்தை வளர்த்து வருகின்றன.

இந்நிலையில் சிறிலங்காவின் மனிதவதைகளால் பாதிக்கப்படும் தமிழ் மக்களின் உண்மைநிலைகளை எடுத்துக் கூற சர்வதேச அமைப்புக்கள் அரச சார்பற்ற அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு சர்வதேச மட்டத்தில் அனுமதி அங்கீகாரம் அளிக்க வேண்டும். நேற்று தென்னாபிரிக்க விடுதலை அமைப்புக்கும் இன்று பலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும் கொடுத்த–கொடுக்கின்ற அதே உரிமையை இவ்வாண்டில் தங்கள் அமைப்புக்கும் கொடுக்கும்படி புலம் பெயர் தமிழ் மக்கள் உலகை கேட்கின்றனர். இதனை சர்வதேச அமைப்புக்கள் நிறைவேற்றினாலே சிறிலங்கா தமிழ் மக்களை இன அழிப்பு செய்யும் கொடுமை மறையும். அவ்விதம் அங்கீகாரம் அளிக்கவிட்டால் அதற்கான நியாயமான காரணங்களை தமிழ் மக்களுக்கு பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டிய கடமை சர்வதேச அமைப்புக்களுக்கு உண்டு. இல்லையேல் சர்வதேச சட்டங்களும் அமைப்புக்களும் அர்த்தமற்றவை என்ற கருத்து உலகில் பலம் பெறுவதை தவிர்க்க முடியாது என்பது மட்டுமல்ல தங்கள் உடன் பிறப்புக்களின் பகிரங்க இனஅழிப்புக்கு சர்வதேச அமைப்புக்களும் உடந்தையாக உள்ளன என்ற உண்மையையும் புலம் பெயர் தமிழ் மக்கள் பகிரங்கமாக எடுத்துக் கூற வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் சிறிலங்காவின் பெருமளவிலான ஆளணி நகர்வுகளை தடுத்து நிறுத்தி ஜயசிக்குறுய் நடவடிக்கையையே தோல்வியுற வைத்ததின் மூலம் விடுதலைப்புலிகள் தாம் கெரில்லா இயக்கம் மட்டுமல்ல மரபுவழி இராணுவமாகத் தமிழீழ மக்களுக்கும் தமிழீழத் தேசத்திற்கும் தேசிய பாதுகாப்பு வழங்கும் ஆற்றல் உள்ளவர்கள் தாம் என்பதை முழு உலகிற்குமே மீண்டும் நிரூபித்து விட்டனர். இதனால் விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமல்ல ஒடுக்கப்பட்ட தமிழீழ மக்களின விடுதலை இயக்கம்–தமிழீழ மக்களின் அரசியல் பணியை இயல்பாகவே பெறும் அரசு நோக்கிய அரசாக உள்ளனர் என்பது உலகிற்கு நன்கு தெளிவாகி உள்ளது. இந்நிலையில் இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தை ஏற்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தேசிய விடுதலை இயக்கமாக சர்வதேச அமைப்புக்கள் அங்கீகரிக்க வேண்டும். இதற்காக உழைக்கும் பெரும் பொறுப்பையும் எமது மக்கள் மீது சிறிலங்கா தொடுக்கும் எத்தகைய யுத்தத்தையும் எதிர்த்து முறியடிக்கும் ஆற்றலை எமது விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பெருக்குவதற்கான எம்மாலான உதவிகளை வேகப்படுத்தும் கடமையையும் நிறைவேற்ற எம்மாலானவற்றை செய்யும் ஆண்டாக இவ்வாண்டை மாற்றுவோம் என இப் பொங்கல் பண்டிகை நேரத்தில் உறுதி எடுத்து பொங்கலோ பொங்கல் எங்கள் தமிழீழ மக்களின் அடிமை நிலை மாற பொங்கலோ பொங்கல் என உரக்க கூவுவோம். தமிழீழ மக்களின் இறுதி தாகமான தமிழீழ விடுதலை எய்தப்படும் ஆண்டாக இவ்வாண்டு அமையட்டும் எனக் களத்தில் ஆசிரியர் குழு சார்பாக பொங்கல் வாழ்த்துக் கூறி நிற்கின்றோம். மக்கள் துன்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அமைதி பெருகட்டும்.

***


| AUSTRALIA | CANADA | DENMARK | FRANCE | GERMANY | ITALY |
|---|---|---|---|---|---|
| TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072 | WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z5 | LTTE<br>P.O Box 47,<br>7400 Herning | TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris | TCC<br>Postfach 340251,<br>51624 Gummersbach | TCC<br>Via Mariano Stabile - 49,<br>90139 Palermo |
| **NETHERLANDS** | **NORWAY** | **SWITZERLAND** | **SWEDEN** | **UNITED KINGDOM** | **U.S.A** |
| TCC<br>Gd. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg | TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo | WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich | TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga | UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432 |

# தாகம் அடங்கும் வரை வேங்கை களமாடும்



எரியோடு எம் தேசம் எழுந்தாடட்டும்
— அனல்
மழையோடு புயல் வீசிக் கடல்
பொங்கட்டும்
தழல் கொண்ட விழியோடு
எழுந்தாடுவோம் — எங்கள்
தலைவன்தன் வழியாகி உயிர்
சிந்துவோம்.

சாவை மடிமீது சுமந்து பகை வீடு
சென்று வெடித்தவர் திசை
பொங்கடா
தாயகத் தென்றலிற்
தீப்பற்றி எரியட்டும்
திடமோடு கிரிகாலன் படைசேர வா.

கடலென்ன படைகள் எதிர் வந்து
மோதிட உணர்வு சிலிர்த் தெழுந்தார்.
உடல் தன்னில் நெருப் பெரித்தார் —
இவர் உயிர் என்ற கலம் எடுத்தார்.
எங்கள் கடல் மீது பகைக் கப்பல்
போகுமோ?

பீரங்கி வாய்கள் பிழம்புகள் தூவுமோ?
பொங்கிவரும் கரும்புலி வெடியோடு
போகும்
தங்களுயிர் தூசாக உடல்பிய்ந்து
சாகும்.

காற்றிலே கால்வைத்து ஏறி நடந்தார்.
கூற்றுவன் வேருக்கு எரியாகச்
சென்றார்.
மாற்றார்எம் மண்மீது மகிழ்ந்
தாடலாமோ?
காற்றாகச் செல்வோம் தோற்றோடிப்
போவார்.

பொங்கு புலிக்கூட்டம் புறங்காணக்
கூடுமோ?
சிங்களச் சேனைகள்
தங்ககம் வாழுமோ?
வேங்கைப்படைத் தலைவன்
ஆணைமுடிப்போம் — அவன்
விழியில் நெருப்பாகி விண்ணை
எரிப்போம்

காலனே ஓடிவரும் கனல்கொண்ட
சத்தம்.
சீறிடும் வேங்கைகளின் சாகொன்ற
யுத்தம்.
சாவோடு கதைபேசிச் சுழன்
றாடுவோம் — நாங்கள்
கரும்புலிகள் என்றபெரும் பிழம்
பாகுவோம்.

வானம் பிளந்தொரு பூகம்பம்
உதிரும்.
தேகம் எரிந்திட யாகங்கள் தொடரும்.
தாகம் அடங்கிடும் வேளை வரைக்கும்
வேகம் கொண்டேயிந்த வேங்கை
களமாடும்.

புயலாகுவோம்.. - பெரும்
பூகம்பமாகுவோம்.. -
தழலாகுவோம்.. - - -
திரள்கின்ற பிரளயப் பிழம்பாகுவோம்.

— அம்புலி —

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

க[வி]தைக் கலசம்

## போராட்டம்

[illegible]



[illegible]

12ம் பக்கத் தொடர்ச்சி

## அப்பாச்சி....

ஏத்திக் கொண்டு போனவனாம். அதனாலதானாம் 'தொண்டமானாறு' என்ட பேரும் வந்ததாம்.

எனக்கு எங்கட வீட்டை போகோணும் போல இருக்கு. அப்பாச்சியின்ர போட்டோவை எடுத்து, அப்பாச்சி படுத்திருக்கிற இடத்தில படுத்திருந்து, அவ சொல்லுற கதையள் ஒவ்வொண்டையும் ஆருக்கும் சொல்லோணும் போல இருக்கு. [illegible]

அம்மாவுக்கு, அப்பாச்சியை ஆர் பாக்குது? உறுதி ஆரிட்டக்கிடக்கு? [illegible] சகலதையும் மூத்த மாமாவிட்ட கேட்டுக் கொண்டு இருக்கிறா. அப்பாச்சி பற்றி கவலையள் ஒண்டும் அம்மாவுக்கு இல்லை. காணி, சொத்து, வீடு வாசல்கள் எல்லாத்தையும் அனுபவிக்கிற நினைவிலதான் அம்மா.

அப்பாச்சியின்ர அன்பு, அரவணைப்பு அதுகளை என்னால மறக்கேலாதாம். எனக்கிப்ப ஒரே ஆசை மட்டும்தான். அப்பாச்சி சொன்னமாதிரி நானும் அப்பாச்சியும் நிண்டு எடுத்த போட்டோவை எடுத்து வந்து, பெரிசாக்கி வாசல் நிலேல தொங்கவிடோணுமெண்டு.

[illegible]

* * *





## 'ஓயாத அலைகள் - 2' கிளிநொச்சித்தளம் மீதான தாக்குதலின் நிழற்படங்கள்





## 'ஜெயசிக்குறுய்' களமுனை நிழற்படங்கள்





# போரும் பொருண்மியமும்

தமிழீழம் தன் சுயதேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வேண்டிய பொருட்களை உள்ளூர் வளங்களை பாவித்து உற்பத்தி செய்யாது, வெறுமனே பணப்பொருட்களை உற்பத்திசெய்து சிங்களவரின் சந்தையில் விற்றதால்தான் நிதியையும் பொருட்களையும் சிங்களவரின் தயவில் பார்த்து நிற்கும் நிலையுண்டானது.


இன்று போர்க்காலத்தில் நாம் மேற்கொள்ளும் முறைகள் புதிய கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பதுடன் புதிய பொருட்களையும், புதிய சந்தையையும் நமக்கு உருவாக்கித்தரும். இங்கு கண்டு பிடிப்புக்குத் தேவையான நிதி வளத்தையும், மூளை வளத்தையும் நம்மிடையே பெருக்கிக் கொள்வது தான் சாலச்சிறந்தது.

எமது மக்கள் நிவாரணங்களில் தங்கியிராது எமது சொந்த முயற்சியில் எமது கால்களில் நிற்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும் ஆரோக்கியமான மக்களே ஆரோக்கியமான சமுதாயத்தையும் எதிர்காலத் தலைமுறையையும் உருவாக்குவார்கள். சிங்கள அரசு விதித்த பொருளாதாரத் தடை இன்று போசாக்கின்மையைத் தோற்றுவித்துள்ளதுடன் பலவீனமான எதிர்கால சந்ததியையும் உருவாக்குகின்றது. தமிழீழம் பலவீனமான மக்கள் கூட்டத்தையும் பலவீனமான உற்பத்தியையும் கொண்டிருக்வேண்டுமென்ற எண்ணத்தின் வெளிப்பாடே சிங்கள வரின் செயற்பாடாகும்.

தமிழீழத்தில் சிறுவர்களின் போசாக்கின்மை குறைவு 50 வீதத்தையும் தாண்டியுள்ளது. எனவே இது தமிழீழம் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சனையாகும். வடக்கு கிழக்கில உள்ள சிறுவர்களின் போசாக்கின்மையை இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளில் உள்ள நிலமைகளை ஒத்தது என வெகு இலகுவாக சிங்கள அரசு காரணம் கூறி கைவிரித்தது. இது சிங்கள அரசின் இனவாதப்போக்கிற்கு ஓர் உதாரணமாகும்.

இன்று இக்குறையைப் போக்க பல இடங்களில் போசாக்கு புனர்வாழ்வு மையங்கள் இருந்தபோதும் உள்ளூரில் கிடைக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு இவ் நிலையங்கள் தற்போது செயற்பட்டு வருகின்றபோதும் அவை போதியவையாக இல்லை.

எனவே இத்தேவையைப் பூர்த்தி செய்ய அதிக நிலையங்களைத் தோற்றுவிக்க எமது உதவியும், உற்பத்தியை அதிகரிக்க கைத்தொழில் முறைப் படுத்வேண்டிய வழிமுறைகளையும் வழங்க முன்வருபவர்கள் உங்கள் நாடுகளில் உள்ள அமைப்பின் பணியகங்களூடாக தொடர்புகொள்ளவும். நிதிவசதியில்லாத எந்த ஆலோசனையும் நடைமுறைக்கு சாத்தியப்படாது. எனவே முதலீட்டுக்கு வேண்டிய நிதியைத் தேடும் வழிமுறைகளை செயற்படுத்த முன்வாருங்கள்.





## மேஜர் பகலவன்

# பலவண்ணச் சிறகுடைய பறவை

மேஜர் பகலவன் (நாடபாஸ்கரன்) விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பொறுப்பாளராக இரண்டு வருடங்கள் செயற்பட்டவர். பின்பு, கலை பண்பாட்டுக் கழக நடுவப் பணியகத்துடன் இணைந்து அதன் திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளராகப் பணியாற்றியவர். இவருடைய இந்த செயற்காலத்தில் மூன்று வீடியோப்படங்களும் சில குறும்படங்களும் தயாரித்து வெளியிடப்பட்டன.

இதன் பின்னரான காலத்தில் பரப்புரைப் பிரிவில் புதிய போராளிகளைச் சேர்ப்பதிலும் போராட்டக் கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும் முன்னின்று உழைத்தவர். சிறந்த பேச்சாளர். கவிதை, சிறுகதை என்று இலக்கியப் படைப்பாளியாகவும் தன்னை இனங்காட்டியவர். சகல துறைகளிலும் ஆற்றல் மிக்க போராளியாகத்தன் பணியைச் செய்து போராட்டத்திற்கு வலுச் சேர்த்த இவர் 01.02.98 அன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட சிறீலங்கா இராணுவத் தளம்மீதான [illegible] நடவடிக்கையில் வீரச்சாவடைந்தார்.

90 களின் முற்பகுதியில் ஒரு இளம் செய்தியாளன் வடமராட்சியிலிருந்து பத்திரிகைக்கு மிக நேர்த்தியாக செய்திகளை வழங்கிக் கொண்டிருந்தான். தான் வழங்கும் செய்திகளுக்கூடாக இந்தச் செய்தியாளன் தன்முகத்தை முதன் முதலில் வெளியே காட்டினான். செய்திகளின் முக்கியத்துவம், செய்திகளிலுள்ள முக்கியத்துவத்தாலேயே அமைகிறது. இந்த நுட்ப உண்மையைப் புரிந்துகொண்டு இந்தச் செய்தியாளன் செயற்பட்டான்.

செய்தியாளனாக அறிமுகமான இந்த முகம் தொடர்ந்து கவிதை, சிறுகதை என்று எழுதத்தொடங்கி இலக்கியத்திலும் பரிச்சயம் கொண்டது. தனது எழுத்து முயற்சிகளை விடுதலை நோக்கிய விரிந்த பரப்பில் முன்னெடுப்பதே இந்த முகத்தின் பிரதான பண்பாக இருந்தது. இந்த முனைப்பு கூர்மையடைந்து சொல், செயல் என்பவற்றுக்கான இடைவெளியென்பதை நிரப்பி, 'செயலே சிறந்த சொல்' என்பதாக மாற்றங்காணும்போது இந்த முகம் ஒரு போராளி அடையாளத்தைத் தாங்கியது.

நா. பாஸ்கரன் என்ற இந்த முகம் பகலவன் என்ற நிலையான பாத்த அடையாளமாகியது இப்படித்தான்.

மனித நேயம், உயரிய பண்பு, விடுதலை மீதான பற்றுதல், சுதந்திர தாகம், கொள்கை மீதான உறுதி, செயற்படுவதிலுள்ள தீவிரம், மக்களை அரவணைப்பதிலும் தேசிய பற்றிலுமுள்ள ஆர்வம் என்பன இந்த முகத்தின் சரியான அடையாளமாக இருந்தன.

[illegible] இளமைக்கால செயல்கள் [illegible] வாழ்வின் சகல நிலைகளிலும் விருத்தியையும் செழுமையையும் அடையாளத்தையும் தரும் என்பது இந்த முகத்தின் தெளிந்த முடிபு.

பகலவன் என்ற இந்த முகம் பிரகாசமானது. புன்னகையும் வசீகரமும் நிறைந்தது. பழகும் மனிதரைத் தன்வசமிழுத்து விடுதலையை நோக்கிய போராட்டச் செயற்பாட்டில் இணைப்பதற்கும் தூண்டுவதற்கும் இது தன் சக்தியை அர்ப்பணித்தது.

செய்தியாளன், இலக்கியவாதி என்ற பண்புகளின் வழியாக போர்விக்குரிய சிறப்பம்சங்களையும் இணைத்து போராட்டச் செயற்பாட்டில் தன்பணியைச் சிறப்பாகச் செய்தான் பகலவன்.

போராளியாக செயற்படும் காலத்தில் கலை பண்பாட்டுக் கழகத்தின் வடமராட்சிப் பொறுப்பாளராகப் பணிசெய்கையில் பிரதேசக் கலைஞர்களை வெற்றிகரமாக இணைத்து மக்களுக்கான போராட்டக் கருத்துக்களை வழங்குவதில் நல்ல வழிமுறைகளைக் கையாண்டான். கலைக்கும் மக்களுக்குமான உறவின் நுட்பங்களை அறிந்து அந்த நுட்பத்தினோடு போராட்டக்கருத்தை மக்களுக்கு வழங்கி மக்களை இணைப்பதிலும் புதிய போராளிகளை உருவாக்குவதிலும் கலைகளை வளர்ப்பதிலும் ஒரு செயல் வீரனாகவே பகலவன் தன்னை அடையாளம் காட்டினான்.

வடமராட்சிக் கோட்டக் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளராக இவன் செயற்பட்ட போது அந்தப்பிரதேச படைப்பாளிகளின் சிறுகதைகளைத் தொகுத்து வெளியிட முயற்சித்தான். ஆனால், இறுதியில் அந்தத் தொகுதியை வெளியிட முடியாத நிலையேற்பட்டுவிட்டது வருத்தத்துக்குரியதே!

பின்பு கலைபண்பாட்டுக் கழகத்தின் திரைப்படப்பிரிவின் பொறுப்பாளராகப் பணியாற்றும் காலத்தில் தமிழீழத்தின் வீடியோப் படத் தயாரிப்புக்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் செழுமைக்குமாக முடிந்த வரை பாடுபட்டான்.

இயக்கத்தலைமையின் வழிகாட்டலில் சரியான இலக்கு நோக்கித் தன் பணியை ஆற்றுவதில் பகலவன் எப்போதும் ஒரு முன்மாதிரியான பாத்திரத்தையே வகித்தான். இவன் தேசிய விடுதலையென்பது பெண் விடுதலை, சமூகத்தின் சகல தளைகளிலிருந்தும் விடுபடுதலே என்ற கருத்தோடு இயங்கியவன்.

போராட்டத்தின் சகல பணிகளிலும் தன்னை நிறுத்தி தகைசார் பங்கைச் செய்து முடிப்பதில் ஆர்வமாயிருந்த ஒரு போராளியை, பல துறைசார்ந்த தேர்ச்சியுள்ளவனை சடுதியாக இழப்பதென்பது அதிகம் துக்கத்துக்குரியதும் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துவதுமாகும். காலம் எந்தவொரு இடைவெளியை நிரப்பினாலும் அந்த இடைவெளி ஏற்படுத்தும் பாதிப்பு அடையாளம் மனித மனங்களிலும் வரலாற்றிலும் தன் இருப்பைப் பதித்துவிடும். பகலவனின் இழப்பும் இத்தகையதே!

கருணாகரன் (தமிழீழம்)

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ராமின் 'சந்திரிகா புறொஜெக்ட்'




'அவர்களுக்கு அப்போது (கைது செய்யப்படும்போது) 13 அல்லது 15 வயது இருக்கும். அவர்கள் 11-13 வயதுகளில் (புலிகள் இயக்கத்தில்) சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளில் இருந்து திரும்பும் வழியில் பலாத்காரமாகப் பிடிக்கப்பட்டு யாழ். குடா நாட்டிலுள்ள சில முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு பயிற்றுவிக்கப்பட்டார்கள் மூன்று வருடத்தில் பெற்றோரைப் பார்ப்பதற்காக ஒரு முறை மட்டுமே அனுமதிக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் தப்பி ஓடாதிருக்க புலி உறுப்பினர்கள் கூடவந்தனர். அந்தப் பெண்பிள்ளைகள் தற்போதும் எம்மிடம் உள்ளனர். முதல் வாரத்தில் (கைது செய்யப்பட்டு) பேட்டி எடுக்கப்பட்டது. அவர்கள் தமிழ் மட்டுமே கதைப்பார்கள். எங்களிடம் முழு ஒலியிழை நாடாக்களும் உள்ளன. அவை முழு உலகிற்கும் அனுப்பப்பட்டன

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரதுங்க இந்திய செய்தி ஆசிரியர் ராமிற்கு வழங்கிய அட்டைப்பட கதையில் இருந்து 01.01.99 (Frontline).

தமிழீழ விடுதலைப் புலிகளை 'பொல் பொட்டிஸ்ட்டுகள்' எனவும் சிறீலங்கா இனவாத அமைப்பின் தலைமையை, உண்மையான மாற்றத்தை விரும்பும் தலைவர் எனவும் வர்ணிக்கும் 'புரொண்ட்லைன்' (Fronline - 01.01.1999) ஆசிரியர் ராமின் சமீத்தைய அட்டைப்பட 'கதை' தமிழீழ விடுதலைப்போராட்டத்தை கொச்சைப்படுத்தும் சிறீலங்கா முயற்சியிலே மற்றொரு வெளிப்பாடு என வகைப்படுத்தலாம்.

சிங்கள ஜனாதிபதியின் நான்கு வருடகால ஆட்சியானது முன்னைய சிங்கள தலைமை ஆட்சிகளிலும் கோரமானது - மனிதவதைகள் நிறைந்தது. நாகரீக 'உலகம் வெட்கிக்கக் கூடியது. ஆனால் இக் கொடூரமுகத்தை மறைத்து சந்திரிகாவை சமாதான விரும்பி எனவும், தமிழ், சிங்கள இன முரண்பாட்டை ஒரு சிறீலங்கா தலைவராகவே இருந்து தீர்க்க விரும்பும் நல்லவரெனவும் ராம் அறிமுகப்படுத்துகின்றார். சிங்களம் மட்டும் சட்டத்தை அறிமுகப்படுத்திய தந்தை, தரப்படுத்தல் மூலம் தமிழர்களின் கல்வித்துறை மீது கை வைத்த தாயார் எனப்பாரம்பரியம் மிக்க சிங்கள இனவெறிக்குடும்ப உறுப்பினராக சந்திரிகாவை அறிமுகப்படுத்த முயலாத ராம் இலங்கைத் தீவை 'சிங்களம் மட்டும் சட்டம்' என்ற சதியும் சூழ்ச்சியும் பற்றிப்பிடிப்பதாக விபரித்து 'சந்திரிகா திட்டமானது' இச்சதிவலைகளை உடைக்க முயற்சிக்கின்றதென புகழ்ந்தவாறு சந்திரிகாவுடனான செவ்வியை நடாத்தியுள்ளார்.

**இச் செவ்வியானது பத்து வருடங்களுக்கு மேலாக புலி எதிர்ப்பு நிலைப்பாடு ஒன்றை நிரந்தரமாக கடைப்பிடிக்கும் இந்திய பத்திரிகையாளர் ராமிற்கும் அதே நோக்கைக் கொண்ட சிங்கள இனவெறி தலைமைக்கும் இடையேயான பரஸ்பர பொது புள்ளியில் நின்றுகொண்டு மேற்கொள்ளப்பட்டது**

இச் செவ்வியானது பத்து வருடங்களுக்கு மேலாக புலி எதிர்ப்பு நிலைப்பாடு ஒன்றை நிரந்தரமாக கடைப்பிடிக்கும் இந்திய பத்திரிகையாளர் ராமிற்கும் அதே நோக்கைக் கொண்ட சிங்கள இனவெறி தலைமைக்கும் இடையேயான பரஸ்பர பொது புள்ளியில் நின்றுகொண்டு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு ஆய்வு ரீதியான பார்வை தேவையற்றது.

புலிகளை தன்முகவுரையில் ராம் பின்வருமாறு விபரிக்கின்றார்.

(அ) போல் பொட்டிஸ்துக்களான (Polpotist) புலிகள் பெரியளவிலான சேதத்தையும் துரதிஸ்டவசத்தையுமே கொண்டு வந்தவர்கள்.'

(ஆ) 'புலிகள் வளங்கள் கொண்ட கொலைகார அரசியல், இராணுவ அமைப்பு' இப்படியில் சந்திரிகா தமது சிங்கள பேரினவாதத்தின் தேவைகளை தந்திரோபாயரீதியான வார்த்தைகளூடு பிரதிபலிக்க முற்படும்போதும் கருத்துக்களில் நிலவும் முன் - பின் முரண்பாடுகள் அதனை அம்பலப்படுத்துகின்றன. தனது ஆட்சிக்காலத்தின் வெற்றி சனநாயகம் பாதுகாக்கப்படுவதே எனவும் சிறீலங்கா ஒற்றையாட்சி முறையுள்ள நாடாக இல்லாது விட்டாலும் 'இணைந்த' நாடாக இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டதும் என சந்திரிகா வகைப்படுத்துகிறார். இது சுவாரசியமான விடயமாகும். சிங்கள பேரினவாதத்தின் மொழியில் சனநாயகம் என்



பது என்ன என்பதை சந்திரிகா வகைப்படுத்தவில்லை. வன்னியில் எட்டு லட்சம் மக்கள் மீது பட்டினியைத் திணித்து விட்டு அவர்கள் மேல் போர் செலவினத்தை 60 பில்லியன்களுக்கு உயர்த்தும் அமைப்பை, குடாநாட்டில் இரகசியப் புதைகுழிகளில் பலநூறு தமிழர்களை புதைத்துவிட்டு அது பற்றி மௌனம் சாதிக்கும் அமைப்பை, 15,000 தமிழர்கள் 8 வருட காலத்திலுள் காணாமல் போய்விட்டதாக (இரகசியமாக கொல்லப்பட்டுவிட்டதாக) தன் உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பகிரங்கமாகப் பேசியும் கூட அது பற்றி மூச்சுவிடாத சனநாயகத்தினை ஜனாதிபதி சந்திரிகா 'ஜனநாயகம்' என்று வர்ணித்துள்ளார். இது சிங்கள பேரினவாதத்திற்கான சனநாயகம். இவ் அமைப்பு சர்வதேச அரசியல் பாதுகாப்பிற்கான தேவைகளைக் கொண்ட ஆயுதம் என்றுதான் என வகைப்படுத்தலாம்.

தனது அடுத்த சாதனையாக சிறீலங்கா ஒன்றுபட்டு இருந்தாலே போதுமானது என முதல் தடவையாக சிங்கள பெரும்பான்மை மக்களுக்கு தான் எடுத்துக் கூறியதாக சந்திரிகா பெருமைப்படுவது ஒரு விதத்திலான ஒப்புதல் வாக்குமூலம் எனச் சொல்லலாம். தொடர்ச்சியான, அற்புத இயக்கங்கள் மூலமான போராட்டம் மூலமே சிங்கள இனவாத பிடியை உடைக்கும் வலிமையைத் தமிழர்கள் பெற்றார்கள். அந்த வலிமையின் அழுத்தத்தின் நிமித்தமே சந்திரிகா ஒற்றையாட்சி பற்றியும் ஒன்றுபட்ட சிறீலங்கா பற்றியும் கருத்து தெரிவிக்க முயன்றார். இது எம்மால் நிரூபிக்கப்பட்ட அல்லது பணிக்கப்பட்ட விதி என்பதை அவரால் ஏற்றுக் கொள்ளமுடியாதுவிட்டாலும் ஒற்றையாட்சி என்ற இரும்புக் கூட்டை பிரபாகரன் தலைமுறை ஏற்றுக்கொள்ளாது என்ற உண்மையை அவர் ஏற்றுக் கொண்டுவிட்டார்.

நான் தமிழ் மக்களை நம்புவதாகவும் சாதாரண மக்களும் புலிகளும் பிரபாகரன் மேல் அழுத்தத்தை பிரயோகித்து போரில்லாத தீர்வு ஒன்றுக்கு அவரை இழுத்துவிடுவர் என தான் நம்புவதாகவும், ஆனால் பிரபாகரன் அவரது மக்களி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# போர் அவர்களைப் பணக்காரர் ஆக்குகின்றது.

**சிறீலங்காவில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தில், ஆயுத விற்பனையாளர்களும், இடைத்தரகர்களும் 200 மில்லியன் குறோண்கள் (180 கோடிரூபா) வரை சம்பாதிக்கின்றனர். தரகுக் கூலியும், இலஞ்சமும்அரசியல் வாழ்விலும், இராணுவ உயர்மட்டத்திலும் ஆழமாக வேரோடியுள்ளன. இவ் ஊழல் பற்றி பொதுமக்கள் அறியாத வகையில் செய்தித் தணிக்கை தடை செய்கின்றது.**

*– கொழும்பிலிருந்து நீஸ் ஒலஸன்.*



**02.01.1999 டென்மார்க் பொலிற்றிக்கன் [POLITIKEN] செய்தித் தாளிலின் தமிழாக்கம்**

தமிழ்ப்புலிகளுக்கும் சிங்கள அரசுக்கும் இடையே 15 வருடமாக நீண்டு செல்லும் இனப் பிரச்சினை, குறைந்த பட்சம் 65,000 மனித உயிர்களையும், கோடிக்கணக்கான டொலர்களையும் பலி கொண்டிருக்கின்றது. 200,000 தமிழர்கள் தீவை விட்டு வெளியே விரட்டப்பட்டும், 15 இலட்சம் தமிழர்கள் உள்நாட்டு அகதி முகாம்களில் உழலவும் செய்கின்றனர். போரைப் பற்றிய சலிப்பு மக்களிடையே வெகுவாகப் பரவியுள்ளது. ஆனால் ஒரு சிறு குழு மட்டும் சமாதானத்தைக் கண்டு அஞ்சுகின்றது. இவர்கள்தான் ஆயுத வியாபாரிகள். இவ் வருடம், சிறீலங்கா அரசானது தனது வரவு செலவுத்திட்டத் தொகையின் மூன்றில் ஒரு பங்கை போருக்குச் செலவழிக்கின்றது. இத்தொகை 5400கோடி ரூபாவாகும் இத் தொகையின் 30 வீதமான பணம் 1800கோடி ரூபா போருக்கான சாதனங்களை வாங்குவதற்குப் பயன்படுகிறது.

'தற்போதுள்ள தரகுக் கூலியான 10 வீதப்படி இவ்வாண்டில் மட்டும் ஆயுத வியாபாரிகளும் இடைத்தரகர்களுக்கு ஏறத்தாழ 180 கோடி ரூபா வரையில் சம்பாதித்துள்ளனர்' எனச் சொல்கின்றார் முன்னாள் விமானப்படை உதவி மார்ஷலான ஹரி குணதிலக.

'போர் ஊழலை ஒத்த ஒரு விசயம் இங்கு தினமும் நிகழ்கின்றது எனச் சொன்னால் அது தவறாகாது' என மேலும் கூறுகின்றார் அவர். இங்கு அவர், சுவீடன் ஆயுதத் தொழிற்சாலையொன்று இந்திய இராணுவத்திற்கு பீரங்கி விற்பதற்கான கட்டளையைப் பெறுவதற்காக மில்லியன்கள் கணக்கில் இடைத் தரகர்களுக்கு இலஞ்சம் வழங்கிய ஊழலைப்பற்றிப் பேசுகின்றார்.

## இராணுவ செய்தித் தணிக்கை

சுதந்திரமாகச் செயற்படும் பத்திரிகையான தி ஐலண்டின் ஆசிரியரான காமினி வீரக்கோன்? அரசியலில் உள்ளவர்களும் இராணுவத்திலுள்ளவர்களும் ஆயுத வியாபாரிகளிடத்தில் பணம் சம்பாதிப்பதை உறுதிப்படுத்துகின்றார்.

'ஆனால் நாம் இதைப் பற்றி எழுத முடியாது. ஏனெனில் 1998 யூன் மாதம் தொடக்கம் அரச இராணுவச் செய்தித் தணிக்கையை டிசம்பர் மாத ஆரம்பத்திலிருந்து அமுல்செய்துள்ளது. இராணுவத் தணிக்கையாளரிடமிருந்து சிவில் தணிக்கையாளர் செய்தித் தணிக்கைப் பொறுப்பை ஏற்றுள்ளார். ஆனால் தணிக்கைக்கான சட்டமொன்றே ஏனெனில் பிறவற்றுடன், இராணுவம் அல்லது காவற்துறையைச் சேர்ந்தவர்கள் சம்பந்தமாக எழுதுவது தடை செய்யப்பட்டுள்ளது' என காமினி வீரக்கோன் பொலிற்றிக்கன் பத்திரிகைக்குத் தெரிவிக்கின்றார்.

உள்நாட்டு யுத்தத்தையிட்டு எழுதப்படும் எல்லாக் கட்டுரைகளும், அவை பிரசுரிக்கப்படுவதற்கு முன்னர், தணிக்கைக்கு உட்படுதல் வேண்டும். இதன் கருத்து என்னவெனில், இராணுவத்திற்கும், தமிழ்ப்புலிகளுக்குமிடையே நடக்கும் யுத்தம் சம்பந்தமான விபரங்கள் வெளிவரக் கூடாது என்பதுதான். கொல்லப்பட்டோர், காயப்பட்டோர் தொகை சம்பந்தமாகவும் அதே விதிதான் கடைப்பிடிக்கப்படுகின்றது. மற்றப் பத்திரிகைகள் செய்வதுபோல் தி ஐலண்ட் தனது கட்டுரைகளைத் திருப்பி எழுதுவதில்லை. ஆனால் கட்டுரைகளை, தணிக்கை செய்யப்பட்ட பகுதிகளை வெற்றிடமாக விட்டு, அவ்விடங்களில் 'தணிக்கை செய்யப்பட்டது' என்ற சொல்லைப் போடுகின்றது. கடந்த டிசம்பர் மாதத்தில் தோல்வி கண்ட ஒரு இராணுவ நடவடிக்கை பற்றி எழுதப்பட்ட ஒரு கட்டுரையில் மட்டும், 'தணிக்கை செய்யப்பட்டது' என்ற சொல் 11 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## உலங்கு வானூர்திகளும் கவசவாகனங்களும்

தலைநகர் கொழும்பின் பரபரப்பு நிறைந்த துறைமுகத்தில் தினமும் பெரிய கொள்கலன் கப்பல்கள் வந்தவாறு உள்ளன. பாரந்தூக்கிகள் 24 மணிநேரமும் கொள்கலன்களை இறக்கவும் ஏற்றவும் செய்கின்றன. இராணுவ நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட முன்னாள் அதிகாரி ஒருவர் கூற்றுப்படி, 1986ல் படையெடுப்புக்கான ஆயுதங்கள் இஸ்ரேலில் இருந்து 40-50 கொள்கலன்களில் வந்து இறங்கின. ஆனால் இன்று ஒரு கப்பலில் மட்டும் 200 கொள்கலன்கள் வருகின்றன.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு இராணுவத்தின் கட்டளைப்பட்டியல் மிக நீண்டதாக இருக்கும். அத்துடன் இதற்கான விநியோகத்தர்களோ அதைவிட அதிகம். ருஷ்யாவில் இருந்து உதிரிப்பாகங்களுடனான ஆயுதம் தரித்த நான்கு எம்ஐ 24 போர் உலங்கு வானூர்திகளை 18 மில்லியன் டொலர்களுக்கு வாங்குவோமா? அல்லது டி-56 தன்னியங்கி ரைபிள்கள், ருஷ்ய தயாரிப்பான ஏ.கே 47ன் சீன நகல்களான 10,000 துப்பாக்கிகளை ரவைகளுடன் 20 மில்லியன் டொலர்களுக்கு வாங்குவோமா? அல்லது கிழக்கு ஐரோப்பாவில் இருந்து 6 கவசவாகனங்களை உதிரிப்பாகங்களுடனும், 12 ஆயுதம் தரித்த ஆட்காவி வாகனங்களுடனும் 8 மில்லியன் டொலர்களுக்கு வாங்குவோமா?

இடைத் தரகர்கள் போர் விமானங்கள், ரொக்கட்டுகள், தொடர்புச்சாதனங்கள், மின்னியல் காவற்சாதனங்கள், பீரங்கிகள், ஊர்திகள், பாரவூர்திகள் போன்ற அனைத்திலும் பணம் சம்பாதிக்க வாய்ப்புண்டு.

பாதுகாப்புத்துறை ஒன்றைத் தவிர, அநேகமான ஏனைய துறைகளில் நிலவிய ஊழல்களைத் தனது அரசினால் அதிர்ஷ்டவசமாக ஒழிக்கமுடிந்தது என, இவ் வருடத்தின் முற்பகுதியில், சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். விமானப் படையின் முன்னாள் தலைவர் ஒருவரும் நாடாளுமன்ற அமைச்சர் ஒருவரும் ஆயுத வியாபாரம் சம்பந்தமாக ஒழுங்கீனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.


## 65 மில்லியன் செலவில் ஒரு கட்டிடம்

உதவி அமைச்சரின் மகன் ஒருவரும், தளபதி ஒருவரின் மகனும், நாட்டின் மிகப் பெரிய ஆயுத வியாபாரியுடன் இணைந்து தொழில் செய்வதாக கொழும்பில் வெளிப்படையாகவே பேசப்படுகிறது. அத்துடன், இராணுவத்தில் உயர் பதவியிலுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் கல்வி பெற வைக்கும் அளவுக்கு வசதியாக இருக்கின்றார்கள். இவர்களுக்குக் கிடைக்கும் இராணுவ ஊதியம் இதற்குப் போதுமானதல்ல. விமானப்படைக்கான கொள்வனவில் 80 வீதத்துக்குப் பொறுப்பான முன்னணி ஆயுத வியாபாரிகளில் ஒருவர் தலைநகரின் மையப்பகுதியில், கொங்கிறீற், உருக்கு, கண்ணாடி என்பனவற்றினாலான ஒரு பெரிய கட்டிடத்தை நிறுவியபோது, அதைவிட்டு ஒரு சிலரே ஆச்சரியத்திற்கு உள்ளானார்கள்.

இதன் பெறுமதி 58.5 கோடி ரூபாவாகும் மக்களது மொழியில் இக்கட்டிடத்துக்கு மிகப் பொருத்தமான பெயராக 'யுத்தச் சின்னம்' என்ற நாமம் வழங்குகின்றது.

முன்னர், ஒளிப்பட நாடாக்களை வாடகைக்கு விட்டுக்கொண்டு, மோட்டார் சைக்கிளில் ஓடித்திரிந்த இன்றுபெரிய ஆயுத வியாபாரி இப்பிச, கொழும்புக்குப் புறத்தே நீச்சல் தடாகத்துடன் கூடிய ஒரு இல்லத்துக்கும், ஏனைய வகைகளுடன் ஜகுவார் கார் ஒன்றையும் கொண்டு, வாகனத் தொகுதிக்கும் சொந்தக்காரராக இருக்கின்றார். தரகுகூலியும், இலஞ்சமும் கொண்ட ஒழுங்குமுறையின் பெறுபேறுகள் மிகவும் பாரதூரமானவையாகும். பாதுகாப்பு அமைச்சு 1994ல் இஸ்ரேலிடமிருந்து 9 மில்லியன் டொலர்களுக்கு ஆறு கிபீர் போர் விமானங்களை வாங்கியது. இவ்விமானங்கள் சிறீலங்காவின் நிலைமைகளுக்கு உகந்தவை அல்ல என சம்பந்தப்பட்ட துறையிலுள்ள விற்பன்னர்களின் ஆலோசனைக்கு மாறாக இவை வாங்கப்பட்டன.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



# துளி கண்ணீர் சொல்லிய கதையும் கடலில் இருந்து பூமிக்கு அனுப்பிய செய்தியும்



கரியபனை மரங்கள் சடைகளைச் சிலுப்பி ஆடின. கடல் கும்மாளமிட்டது. காற்று குதிரையைப் போல மூசிக் கொண்டே இருந்தது. கிட்டண்ணாவும் தோழர்களுமாய் வெடிமருந்துகளைக் காவிக் கொண்டு போய்நிலத்தில் புதைத்தார்கள். ஆக்கிரமிப்பாளர்களின் காலடிகளை, ஆக்கிரமிப்பாளர்களின் முதுகெலும்பை, ஆக்கிரமிப்பாளர்களின் கனவுகளை சிதறும்படி அதனை வெடிக்கவைத்தார்கள். தோழர்கள் பாய்ந்துவந்து கிட்டண்ணாவைக் கட்டித்தழுவிச் சிரித்தார்கள். மெல்லிய பனிக்காற்றில் கலந்தொலித்த அந்தச் சிரிப்பொலியுள் கிட்டண்ணாவின் கண்களில் இருந்து கண்ணீர் பனித்தது. அந்தக் கண்ணீரில் தாய் நிலத்தின் பிரிவும் வேதனையும் ஒட்டியிருந்தது. வார்த்தைகளால் பேசமுடியாத துயரை அந்தத் துளிக்கண்ணீர் பேசியது.

'புலம்பெயர்தல்' சாதாரணமான நிகழ்வாக இருக்க முடியாது. அது காலில் கட்டிய சலங்கையின் ஒலி போல தொடர்ந்து வரும்.

மண்ணும், காற்றும் பேசும். சூரியன் சிரிக்கும். தொட்டிலில் பழகிய நிலவு முகங்களை அழகை வரும். தென்னை முட்டும் துயர் பின்னேயும், முன்னேயும் இரிபுடை சாவும் வாழ்வும் சமமாகத் தோன்றும். எதிலுமே பற்றற்ற தன்மை உருவாகும். எல்லாமுமே அன்னியமானதொரு தளத்தில் வாழ்வு பற்றிய கனவும் மெல்ல அழிந்து கொண்டே போகும்.

இந்த பட்டறிவு ஏதும் அவருக்கு புதிய படிப்பனவுகளை கொடுக்க வேண்டுமா என்ன?

அவர் இயங்கிய தளம், அவரது உழைப்பு, அவரது ஆற்றல், சிந்தனை யாவும் தேச நிர்மாணத்திலேயே லயித்திணைந்திருந்தது.'

நாங்கள் எங்களை தெருவில் கொண்டு வந்து நிறுத்தியபோதும், நாங்கள் எங்கள் முகங்களை இழப்பதற்கான காலடியை எடுத்து வைத்தபோதும், நாங்கள் எங்கள் வேர்களை இழந்திடப் போகின்ற அவலத்துள் நுழைந்த போதும் அவர் கலங்கினார்.

வாழ்நிலம், பண்பாடு, கலைகள், மொழி, ஆன்மா, வாழ்நிலை வேர் பற்றிய தேடலில் நின்று அவர் போராடினார். இருப்புப் பற்றிய கேள்வியை அவர் பலமாக எழுப்பினார். தேசியம் பற்றிய பற்றுணர்வை அவர் எம்முள் எழுப்பினார். தமிழ்த் தேசியத்திற்கான கட்டுமானப்பணிகளை அவர் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மத்தியில் ஆற்றிய காலத்தில், அனைத்து அம்சங்களிலும் அவர் தனது கூர்மையான பார்வையை வெளிப்படுத்தினார்.

'நாங்கள் ஒவ்வொரு வீட்டை மீட்பதற்காகவும், நாங்கள் எமது வீடுகளை மீட்பதற்காகவும் எப்படிப் போராடினோம்' என நினைவு கூர்ந்து அவர் சொல்வதில் உள்ள 'மீட்பே' எமது வாழ்க்கையின் மனமாக இருக்கும்.

ஆக்கிரமிப்பாளர்கள் எமது வீடுகளை விட்டு எம்மை விரட்டினார்கள். வீடுகளுள் புகுந்து கொள்ளையிட்டார்கள். தீயிட்டுக் கொளுத்தினார்கள். அருமைத் தங்கையை, அருமைத்தாயை, ஆசைச் சகோதரனை வேட்டையாடினார்கள். எமது நிலங்களை விட்டு ஓட ஓட எம்மை விரட்டி, எமது நிலங்களை அவர்கள் சுடுகாடாக்கினார்கள். நாங்கள் தேசாந்திரியாய் அலைந்து திரிந்தோம்.

சிங்கள அரசும் அதன் இராணுவமும் தமிழ் மக்களை அழித்தொழிப்பதையே தீர்வாகக் கொண்டு இயங்கியது. அது வெளியேறல் மூலமும் நிகழும் என அது கனவு கண்டது. தமிழ் மக்களை அவர்களது நிலங்களில் இருந்து விரட்டி அடிப்பதன் மூலமே 'அழித்தொழித்தல், அடிமைகொள்ளுதல்' என்ற இலக்கை அடையமுடியுமென அது கருதியது. குறிப்பாக இளம் சமுதாயத்தினரின் வெளியேறலே தனக்கு சாதகமாக இருக்குமென சிங்கள இனவெறி அரசு திடமாக நம்பியது. தமிழர்கள் உலகப்பரப்பெங்கும் சிதறிப் பரந்தார்கள்.

சிதறிப் பரந்த மக்களை ஒன்று திரட்டி, அவர்களை தமிழ்த்தேசிய உணர்வில் நிலைக்கவைத்த செயற்பாடு எதிரி எதிர்பாராத நிகழ்வாகவே இருந்திருக்கக் கூடும்.

உலக அரங்கில் தமிழர்கள் தமது துயர்களை மற்றவர்களிடம் சொல்லத் தொடங்கினார்கள். சிறீலங்கா சொர்க்கம் அல்ல. சிறீலங்கா மனிதப் படுகொலைகளை நிகழ்த்துகின்ற ஒரு காட்டுமிராண்டித்தனமான நாடு. சிறீலங்காவில் தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள். வாழ்வுரிமை, சுதந்திரம் மறுக்கப்படுகின்றது என்ற இன்னோரன்ன செய்திகளை வெளி உலகின் பார்வைக்கும், கவனத்திற்கும் கொண்டு வருகின்ற உழைப்பு உருவாகியது. அந்த உழைப்பின், செயற்பாட்டின் வேராக கிட்டண்ணா திகழ்ந்தார்.

அப்போதுதான் கிட்டண்ணா எனும் விருட்சத்தை அழித்து விடுவதற்கான ஆயத்தங்களில் ஆக்கிரமிப்பாளர்கள் இன்னும் கூடுதலாக இயங்கத் தொடங்கினார்கள்!



கிட்டண்ணாவின் காலடிச் சுவடுகளை ஒரு வேட்டை நாயைப் போன்று மோப்பம் பிடித்தபடி அலையக் காரணம் என்ன?

அவர் தொடும் ஒவ்வொரு சுவடுகளிலும் தமிழ்த்தேசிய மலர்வும், உருவாக்கமும், எழுச்சியும், நம்பிக்கையும், மக்கள் அணிபாய்த் திரளலும் இருந்ததைக் கண்டே அச்சம் உற்றார்கள். அச்சமுற்ற ஆக்கிரமிப்பாளர்கள் துரத்திக்கொண்டே போனார்கள். யானைத் துரத்துவதைப்போல அவர்கள் துரத்திக் கொண்டே இருந்தார்கள். நிழல் கொடுக்கின்ற மரத்தை வெட்ட வேண்டுமென்று கோடரி சகிதம் அவர்கள் திரிந்தார்கள்.

பனிவிழும் கட்டடக்காட்டுக்குள் பறந்து திரிந்த வெண்புறாவை வேட்டையாட வலைகள் விரித்து வைத்திருந்தார்கள். என்றுமே அவர்கள் சமாதானத்தையும் அமைதியையும் விரும்பவே இல்லை. அமைதி அழிப்பதையும், துயரப்படுத்துவதையும், வேரறு வீழ்வதையுமே விரும்பினார்கள். அந்த கன்றுக்குத் தெரியாத ஒரு பயங்கர யுத்தத்துள் நின்றுகொண்டும் கிட்டண்ணா போராடிக்கொண்டே இருந்தார்.

இந்த நெருக்கடியான யுத்தச் சூழலில் கிட்டண்ணா ஒருபோதும் தன் அழகிய கனவை மறக்கவே இல்லை. அந்தக் கனவும், நினைவும் தான் அவர் இயக்கத் தளம்.

இத்தத்தளம் அமைவதை ஆக்கிரமிப்பாளர்கள் அறவே விரும்பவில்லை.

கனவையும் நினைவையும் எப்படித்தான் அழிப்பது?

இது முடியாத காரியம். ஆனால் ஆக்கிரமிப்புச் சக்திகள் முயன்று கொண்டு இருந்தன. அது மற்றவர்களின் வேலையை இலகுவாக்கும் இன்று வரை அது என்பதை வரலாறுகள் பல அவர்களுக்கு புகட்டியிருக்கவில்லை. ஆனால் அவர்கள் நம்பமறுத்தார்கள். ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கவில்லை. இந்த நிலைமைகளின் அடிப்படையில்தான் அவர்கள் ஒரு உண்மையை பட்டவர்த்தனமாகச் சொன்னார்கள் 'தமிழர்கள் நாடற்றவர்களாய் தேசாந்திரியும் அலைய வேண்டும்' என்பதை. தமிழ்த் தேசிய ஆன்மாவின் குரலாக நின்று அவர்களின் உள்ளக் கிடக்கையை உணர்ந்த கிட்டண்ணா குரல் கொடுத்தார். அது அலைகடலுக்குள்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



ழர்களின் துயிலையும் கலைக்கின்ற குரலாகவே இருந்தது.

'உங்கள் நாடு எது?' என்ற ஒரு பத்திரிகையாளரின் கேள்விக்கு கிட்டண்ணா பதிலளித்தார். 'சிறீலங்கா அரசாங்கம் எங்கெல்லாம் குண்டுகள் போட்டிருக்கின்றதோ அந்த இடங்களுக்கெல்லாம் வர்ணம் தீட்டு. அதுவே எங்கள் தாயகம்' என்று.

எத்துணைக் கொடுமையையும், துயரையும், அழிவையும் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் என்பதற்கு இதைவிட வேறோர் வார்த்தை அவசியமானதாய் இருக்காது.

இத்தனைக் கொடுமைகளைச் சந்தித்துக்கொண்டிருப்பவர்களோடு சமாதானத்தைப்பற்றி பேசுவதை விட கொடுமைப்படுத்துபவர்களோடு போர் நிறுத்தம் பற்றியும் சமாதானம் பற்றியும் பேசலாம் நாம் என்றும் நிரந்தரமான சமாதானத்தையும் நிச்சயமான ஒரு எதிர்காலத்தையும், பூரண அமைதியையும், என்றென்றும் விரும்புபவர்களாகவே இருக்கின்றோம் என்ற விடயங்களையெல்லாம் கிட்டண்ணா தெளிவுபடுத்தினார். இவ்வாறான தொரு அமைதி முயற்சியில் அவர் உளப்பூர்வமாக ஈடுபட்டு உழைத்தார். அத்தகையதொரு திட்டத்தோடு கிட்டண்ணா தாயகம் நோக்கிப் புறப்பட்டார்.

பனை மரங்களின் தலையைச் சிலுப்பி ஆடிய காற்று கெஞ்சலாய் கப்பல் அருகே வந்து குழைந்து கொண்டு நின்றது. கடல் என்றும் இல்லாதவாறு கொந்தளித்தது. கிட்டண்ணா தோழர்களுடன் கப்பலுள் சிரித்தபடி இருந்தார். கடலுக்குள் கிட்டண்ணாவின் கப்பலை இந்திய கடற்படைகள் எதிர்பார்த்துக் காத்துக்கிடந்தன.

சர்வதேச கடற்பரப்பில் கிட்டண்ணாவின் கப்பல் மறிக்கப்பட்டது. உலகம் ஒரு மாயைக்குள் சென்று கொண்டிருந்தது. உலகம் தன் கண்களை வேண்டுமென்றே கட்டிக் கொண்டு இருந்தது. அடாவடித்தனம் நிறைந்திருந்த அந்த நடவடிக்கையை எதிர்த்து அன்று உலகம் கண்டிக்கவோ, குரல் கொடுக்கவோ இல்லை.

கடல் அழுதது. காற்று அழுதது. மக்கள் அழுதனர்.

யார் அழுதால் என்ன? அவர்கள் தம் கருத்தில் கண்ணாயிருந்தார்கள். கப்பலை எத்தனையோ நங்கூரங்கள் பாய்ச்சி இடை நிறுத்த முயன்றார்கள். கப்பலை இடை நிறுத்த முடியவில்லை. கப்பல் ஓடிக்கொண்டிருந்தது. சுட்டு விடுவதாய் சூளுரைத்தார்கள். கடவே முடியாதென வாதிட்டார்கள்.

கடவும், நெருங்கவும், பொசுக்கவும், நொருக்கவும் முடியாத 'விடுதலை உணர்வு' விடுதலை வீரர்களின் கைகளில் விலங்கிட முயன்றார்கள். அவர்களை சிறைப்படுத்த முயன்றார்கள்.

அப்போதுதான்......

காலத்தைக் கடந்தும், வெளியில் கலந்தும் என்றென்றுமாய் வாழுகின்ற வாழ்விற்கான பிரகடனத்தை சர்வதேச கடற்பரப்பில் வைத்து உலக சமூகத்திடம் கிட்டண்ணா சொன்னார்.

உலக ஆன்மாவை உலுப்பி அறையப்பட்ட அந்தச் செய்தி கடலில் இருந்து பூமிக்கு அறிவிக்கப்பட்டது. விடுதலைக் கனல்கள் கடலுக்குள் மூண்டெரிந்தபோது உயிரினங்கள் யாவும் புரிந்துகொள்ளக் கூடிய பொது மொழியொன்றின் ஊடாகவே ஆக்கிரமிப்பாளர்கள் அமர்க்களப்பட்டு அழுதார்கள். கடல் தீ தங்களை சுட்டு விடுமோ என்ற கவலையோடு அழுதார்கள். கடலுக்குள் இருந்து பூகம்பமாய் எழுந்த அந்த தீ அவர்களின் இதயங்களில் ஒளியை நிச்சயமாய் ஏற்றி இருக்கும். அது 'தமிழர்களது மொழி எப்போதுமே கண்ணீராக இருக்கமுடியாது' என்பதை அவர்களுக்கு உணர்த்தியது.

இத்தகையதொரு மாற்றத்திற்கான ஆன்ம உழைப்பில் ஈடுபட்டிருந்த கிட்டண்ணாவும், தோழர்களும் இறுதிக்கணத்திலும் வெற்றியை நோக்கியே பயணப்பட்டார்கள். உலக சமூகத்துக்கும், ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர் சொல்ல முயன்ற அந்தச் செய்திகள் 'உலகளாவிய பார்வையைக் கொள்ளுங்கள் மாறுபட்டக்காதலை மறவிடுங்கள்' என்பதாக இருந்தது. 'இந்த உலகை இருளால் மூடாதீர்கள். அச்சத்தை யார் மீதும் அப்பாதீர்கள்' என்பதாக இருந்தது.

பாவிகளை மனிதனாக 'மதிக்க'... ...பாட்டினை எப்படித் தேடுவது என்பதைக் கற்றுக் கொள் வதற்காக நேர்ந்ததைச் சொல்லிடுங்கள் என்பதாக இருந்தது.

'தமிழர் பூமியில் அமைதியும், சந்தோசமும் எம்மால் அழிக்கப்பட்டது என்ற அவப்பெயர் எமக்கு வரவே கூடாது' என்று இடச்சகம் பூணுங்கள் என்பதாக இருந்தது.

அடக்குமுறைகள் ஒழிந்த புது யுக வாழ்விற்கான சங்கையே அன்று கிட்டண்ணாவும் தோழர்களும் முழங்கினார்கள்.

பூமியில் இருந்தே இனிச் சூரியன் மறைவேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தி அதற்கான அடித்தளத்தை இட்டு அறைகூவல் விடுத்த கிட்டண்ணாவும் தோழர்களும் கடலத்திசையெல்லாம் ஒளிர்ந்து கொண்டே இருப்பார்கள்.

அது மனித சமூகத்துக்கு புதிய பாதைகளைத் திறந்தும் புதிய வெளிச்சங்களை கொடுத்துக்கொண்டேயும் இருக்கும்.

விடுதலைப் பயணங்கள் தொடரும். கனவு மெய்ப்படும்.



– தபா –




**கடலின் மடியில்**
**காவியம் படைத்த**
**வீர மறவர்களை**
**நெஞ்சில் நிறுத்தி**
**ஆராதிக்க**
**அனைவரும்**
**ஒன்று கூடுவோம்**

**சுவிஸ்**

**காலம்** : 16.01.1999 **சனிக்கிழமை**
**நேரம்** : பிற்பகல் 16.00 **மணி**
**இடம்** : Salle De L'aula
Bethusy - 7
1005, LAUSANNE

தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ்பணியகம்

**யேர்மனி**

**காலம்** : 16.01.1999 **சனிக்கிழமை**
**நேரம்** : பிற்பகல் 17.00 **மணி**
**இடம்** : Florianhalle im
Westfalenpark Florian Str.
44122 Dortmunt

கலைபண்பாட்டுக்கழகம்
தமிழீழ விடுதலைப் புலிகள் யேர்மனிப்பணியகம்

**பிரித்தானியா**

**காலம்** : 16.01.1999 **சனிக்கிழமை**
**நேரம்** : பிற்பகல் 18.00 **மணி**
**இடம்** : Alperton Communtiy School (Holl2)
Ealing Road, Wembley
Middx HA0 4PW

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
(பிரித்தானியா) 0171 403 4554